# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/35 - 2016 මාර්තු මස 30 වැනි බදාදා - 2016.03.30

*1960/35 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### துணை விதிகள்

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள்( அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள் ) சட்டம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள) சட்டத்தின் 2 ஆவது பிரவின் (1) ஆவது உப பிரிவின் மூலம் வடமத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார ஆகிய என்னால் ஆக்கப்பட்ட வரைவுத் துணைவிதிகளை இத்தால் வெளியிடுகின்றேன்.*

*மேற்படி வரைவுத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கிய துணை விதிகளை ஆக்குவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ளதோடு, மேற்படி வரைவுத் துணைவிதிகளை மேலே கூறப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்வதற்கு வடமத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளுக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.*

சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார,
முதலமைச்சர் மற்றும் உள்ளூரட்சி அமைச்சர்,
வட மத்திய மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்,
வட மத்திய மாகாண சபை,
அநுராதபுரம்,
*2016, மாச்சு 23.*

**உள்ளடக்கம்**


| தொடர் இலக்கம் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைகள் கொண்டு நடாத்தப்படுதலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் | 1-10 |
| 2. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் ஹோட்டல்கள் கொண்டு நடாத்தப்படுதலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுதல் பற்றிய துணைவிதிகள் | 11-19 |
| 3. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் விளையாட்டுத் திடல்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகள் | 20-24 |
| 4. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உறையகங்கள் கொண்டு நடாத்தப்படுவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் | 25-33 |
| 5. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் வெதுப்பகங்கள (பாண்சாலைகள்) பற்றிய துணைவிதிகள் | 34-41 |
| 6. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் விளம்பரங்கள் பற்றிய துணைவிதிகள் | 42-49 |
| 7. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் மோட்டார் வாகனங்களை வழிப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் | 50-56 |
| 8. | பிரதேச சபை இடப்பரப்பினுள் கொண்டு திரிந்து விற்போரால் உணவுப் பானங்கள் விற்பனை செய்யப்படுதல் பற்றிய துணை விதிகள் | 57-60 |
| 9. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் மீன் விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகள் | 61-67 |
| 10. | பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி | 68-72 |

# ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைகள் கொண்டுநடாத்தப்படுதலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதியானது ...................... பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைகள் கொண்டுநடாத்தப்படுவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. பிரதேச சபைகள் சட்டத்தின் 3வது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் பொதுசன சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டை பேணிவருவதை குறிக்கோளாகக் கொண்டு மேற்படி துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *நோக்கம்.*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. *துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

4. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அதே விதத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலேயன்றி, தவிசாளரால் எந்தவொரு உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைக்கும் உரிமம் வழங்கப்படுதலாகாது. *நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.*

(1) இடம் சிறப்பாக புதுப்பிக்கப்பட்ட நிலைமையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளினதும் சுவர்கள் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்துடன் கூடியதாக காணப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல்லால், சீமெந்துக் கல்லால் அல்லது செம்பூராங்கல்லால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இருபுறமும் சாந்திடப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப் பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் இந்தக் கட்டளைக்கு இணங்கியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய உட்கூரை நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறக்கக் கூடியதான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த ஒவ்வொரு அறையினதும் யன்னல்கள் திறக்கப்படும்போது அந்த யன்னல்களின் பலகணிகளின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவில் பதினைந்தில் ஒரு பங்குக்கு குறைவானதாக இருத்தலாகாது. எனினும், ஏதேனும் ஓர் அறை குளிரூட்டப்பட்டுள்ளபோது இக் கட்டளை ஏற்புடையதல்லாதிருத்தல் வேண்டும்.

(5) கூரை ஏதேனும் உறுதியான பொருளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) கூரையின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரத்திற்கு விடப்பட்ட பகுதி குறைந்தது 1.5 மீற்றராயிருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு அறையினதும் தரை சீமெந்து இடப்பட்டு சாந்திட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை சேகரிப்பதற்கு கழிவுத் தொட்டிகள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, சமையிலறையில் வைக்கப்படுகின்ற கழிவுத் தொட்டி ஈக்கள் அல்லது வேறு

பூச்சிகள் பிரவேசிப்பதற்கு இயலாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை அகற்றும் பொருட்டு 10 ஆவது துணைவிதியின் கட்டளைகளின்படி செயற்படக் கூடியவாறு அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமயலறையில் பாவனைக்கு எடுக்கப்படும் ஒவ்வொரு மேசையும்–

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய மேசையின் மேற்புறம் மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, மேற்புறம் மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மேசையும் –

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய மேசையின் மேற்புறம் கண்ணாடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, மேற்புறம் கண்ணாடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) இடத்தில் பாவனைக்கு எடுக்கப்படும் நீர் மனித பாவனைக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு தடவை வீதம் இந்தத் தரச் சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீர் நிலையத்தின் பாவனைக்கு பயன்படுத்தப்படுமெனில், அந்தத் தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுமெனில், அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுகின்ற நீர் அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்கு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவும் பொருட்டு தனியானதொரு பகுதி இடத்தில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்களினதும் ஊழியர்களினதும் பாவனைக்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒன்று வீதம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் வெவ்வேறான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) ஒவ்வொரு மலசல கூடத்தினதும் சுவர்கள் செங்கல்லால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது செம்பூராங்கல்லினால் அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோன்று மேலும் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அல்லது செம்பூராங்கற்களால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவை சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத

தகட்டினால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவற்றின் மேற்புறத்தில் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனையின் பொருட்டு போதியளவு குளியலறைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, (16) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலசலகூடங்களுக்கு ஏற்புடைய கட்டளைகள் அத்தகைய குளியலறைகளின் தரைக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியினுள், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அல்லது வெண்களியினால் அமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட அல்லது செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அமைக்கப்பட்டு பீங்கான் ஓடுகள் இடப்பட்ட பேசின்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தின் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் அகற்றப்படுகின்ற கழிவுநீர் தடையின்றிச் செல்வதற்கு பொருத்தமான வடிகால் முறைமையொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(20) பிரதேச சபையினால் வடிகால் முறைமையொன்று பேணிவரப்படுவதாயிருப்பின், இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுநீர் பிரதேச சபையினால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் அத்தகைய வடிகாலமைப்பு முறைமைக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அத்தகைய கழிவுநீரை உள்ளீர்க்கக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(21) இடத்தில் சாதாரண தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சாரத் தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேனீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கப்படும் பகுதி ஒட்டப்படாததும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகட்டினால் அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டு அல்லது வேறேதேனும் ஊடறுத்துச் செல்லாத பொருளொன்றினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணம் பூசப்பட வேண்டுமென மற்றும் 4(2) துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை வீதம் வர்ணம் பூசுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

6. உரிமம்பெறப்பட்ட இடம் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் வீதம் பெருக்கிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவுநீர் செல்கின்ற வடிகால்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு நீரினால் கழுவிவிடப்படுதல் வேண்டும்.

7. உரிமம்பெற்ற இடத்திலுள்ள மலசலகூடங்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு தொற்றுநீக்கிகள் இடப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாத வகையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

8. உரிமம் பெறப்பட்ட இடத்தில் உணவு, பானங்களைத் தயாரிப்பதற்கு, விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவை பாவனைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் தூய்மையான நீரினால் கழுவப்படுதல் வேண்டுமென்பதோடு, பாவனையின் பின்னர் கழுவித் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

9. உரிமம் பெற்ற இடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றுசேர்கின்ற அனைத்து கழிவுகளையும் 10 ஆவது துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் தயாரிக்கப்பட்ட பாத்திரத்தில் உடனடியாக இடுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகளை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையோ தேவைப்படின் அதற்கு மேலதிக தடவைகளோ அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, குறிப்பிட்ட பாத்திரங்களில்

கழிவுகளை இடுகின்றபோது மற்றும் அகற்றுகின்றபோது தவிர ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்தப் பாத்திரங்கள் நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

10. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை -

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளரால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

11. ஒவ்வொரு உரிமம்பெற்ற இடமும் எலிகள், ஈக்கள் அல்லது வேறு பூச்சிகளின்றி பேணிவரப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தில் வைத்திருக்கப்படும் உணவு, பானங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவு, பானங்கள் குறிப்பிட்ட விலங்குகளினால் மாசடையச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

12. வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறப்படுகின்றபோது அவற்றைக் கையினால் தொடக்கூடாது என்பதோடு, அத்தகைய உணவு பரிமாறும் பொருட்டு கரண்டி அல்லது முட்கரண்டி அல்லது வேறு விதத்திலான கருவி பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

13. உரிமம்பெற்ற எந்தவொரு இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட பால் எதுவும் வைத்திருக்கப்படல் அல்லது விற்பனை செய்யப்படுதல் ஆகாது. இந்தத் துணைவிதியின் கருமத்தின் பொருட்டு தரம் குறைக்கப்பட்ட பால் என்பதன் மூலம் நீர் அல்லது வேறு புறம்பான பொருள் அல்லது பொருட்கள் சேர்க்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப்பொருள் 85 சதவீதத்திற்குக் குறைவான அல்லது பால் கொழுப்பு 35 சதவீதத்திற்கு குறைவான பசும்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப்பொருள் 9 சதவீதம் அல்லது பால் கொழுப்பு 7 சதவீதத்திற்கு குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

14. உரிமம்பெற்ற இடத்தில் உணவு, பானங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் மேல் ஆடைகள் வழங்குதலும், குறிப்பட்ட ஊழியர்கள் கடமையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட மேல் ஆடைகளை அணிந்திருப்பதை உறுதி செய்தலும் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

15. உரிமம்பெற்ற இடத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் தூய்மையான நீர், சுத்தமான துவாய், நகங்களைத் துப்புரவு செய்வதற்கான தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

16. ...................... பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற அட்டவணை இல. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் உரிமம்பெற்றவரின் கடமையும் பொறுப்புமாதல் வேண்டும்.

துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச்செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

17. தவிசாளரால், குறிப்பிட்ட கருமத்தின் பொருட்டு வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும் ................. பிரதேச சபை இடப்பரப்பினுள் உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைகளை பேணிவருதலாகாது. செய்யக்கூடாத கருமங்கள்.

18. உரிமம்பெற்ற இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையில் அல்லது ஒவ்வோர் இடத்திலும் இடப்படுதலாகாது.

19. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவோர் உரிமம்பெற்ற இடத்திலும் எவ்விதத்திலுமான கருமத்திலும் அல்லது அத்தகைய கருமத்தில் ஈடுபடுகின்ற எவரேனுமோர் ஆளின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி ஆள் எவரும் உரிமம்பெற்ற இடத்தில் எந்த விதத்திலுமான கருமத்தில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

(இ) உரிமம்பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம்பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும்.

20. ஆள் எவரும் உரிமம்பெற்ற இடத்தினுள் புகைத்தல் அல்லது வெற்றிலை மெல்லுதல் ஆகாது.

21. ஏதேனுமொரு உணவகத்தை சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடைகள் பொருட்டு கொண்டுநடாத்தப்படுவதை பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும். அறவீடுகள் மற்றும் கட்டணங்கள் .

22. இந்தத் துணைவிதியின் அலுவல்களின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அதன் தவிசாளர் அல்லது செயலாளர் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும். அதிகாரத்தை ஒப்படைத்தல்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது அனும மதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலம்.*

23. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.*

24. இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இடத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

25. கட்டளையொன்றின் கீழ் உரிமம் பெற்றுள்ள ஓர் இடத்தை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு உதவியளித்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும். அதேபோன்று அத்தகைய எந்தவொரு பரிசோதனையையும் நிறுத்துவதற்கு தடையேற்படுத்தலாகாது.

26. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு உணவகம், சிற்றுண்டிச்சாலை, தேனீர் அல்லது கோப்பிக் கடையை கொண்டுநடாத்துகின்ற இடம் 4ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைக்கும் இணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இப் பிரிவின் துணைவிதிகளின் வேறேதேனும் துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாகின்ற சந்தர்ப்பத்தில், நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைக்கச் செய்வதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

27. தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உரிமம்பெற்ற ஏதேனுமொரு இடத்தில் தயாரிக்கப்படுகின்ற அல்லது விற்பனைக்கு வைத்துள்ள ஏதேனும் உணவு வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

28. துணைவிதியின் 26 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றுள்ள உரிமம்பெற்ற எவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும்.

29. துணைவிதியின் 26 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற உரிமம் பெற்ற எவரேனுமொருவர் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

*முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.*

30. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார்.

31. ஏற்றுக்கொள்ளக்கூடியதான விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கான அதிகாரத்தை தவிசாளர் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்கு மேற்பட்டதாயிருத்தலாகாது.

*துணைவிதிகளை மீறுதல்.*

32. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும்.

33. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

34. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ............... பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகம்' என்பதன் மூலம் விற்பனைக்காக சமைக்கப்பட்ட சோறு மற்றும் கறிகளைத் தயாரிக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடம் கருதப்படும் என்பதோடு, உணவாக உண்பதற்குப் பொருத்தமான வேறு ஏதேனுமொரு தயாரிக்கப்பட்ட உணவு வகை அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகையொன்றை விற்பனைக்காக தயாரிக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமும் இதில் உள்ளடங்குதல் வேண்டும்.

'தேனீர் அல்லது கோப்பிக் கடை' என்பதன் மூலம் வெதுப்பக உற்பத்திகள் அல்லது வேறு சிற்றுண்டிகளோடு தேனீர் அல்லது கோப்பி விற்பனை செய்வதற்காக பேணிவரப்படுகின்ற இடமும்,

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் என்பதன் மூலம், அப்போதைக்கு குறித்த இடத்தின் கருமங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த அதிகாரி' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ....................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தர் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் அல்லது உற்பத்திப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

அட்டவணை

**அட்டவணை 1**

............................. பிரதேச சபை

**வர்த்தக உரிமப்பத்திரமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பம்**

20....... ஆம் ஆண்டு

1. கைத்தொழில்/வர்த்தக உரிமையாளரின் பெயர்: ..........
2. சொந்த முகவரி: ...........................
3. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | | |
4. தொலைபேசி இல.: வதிவிட: ........... செல்லிட:.................
5. கைத்தொழில்/வர்த்தக தொழில்முயற்சியின் பெயர்: .......................
6. கைத்தொழிலின்/வர்த்தகத்தின் இயல்பு: ............................

கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறும் இடத்தின். -

(அ) முகவரி: ............................

(ஆ) வீதியின்/தெருவின் பெயர்: ............................

(இ) ஆதனவரி இல.: ............................

(ஈ) தொலைபேசி இல.: ............................

7. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடம் உரித்தாகின்ற
   கிராம அலுவலர் பிரிவின் இல.: ............................
   பிரிவின் பெயர்: ............................
8. தொழில்முயற்சிப் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் தொடர்பு இல.: ............................
9. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடத்தின் முகாமையாளரின்/முகவரின் பெயர்: ............................
10. தேசிய அடையாளஅட்டை இல.: .. | | | | | | | | | | | |
11. தொலைபேசி இல.: வதிவிட: ........... செல்லிட:.................

-------------------------
தவிசாளர்.

மேற்படி தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்/வர்த்தகம் கொண்டு நடாத்தப்படுகின்ற இடத்திற்கு 20...... ஆம் ஆண்டுக்காக கைத்தொழில்/வர்த்தக உரிமப்பத்திரமொன்றை எனக்கு வழங்கும்படி வேண்டுகிறேன். இது தொடர்பில் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன்.

................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .............................

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் ஹோட்டல்கள் கொண்டுநடாத்தப்படுதலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதியானது........... பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் ஹோட்டல்கள் கொண்டு நடாத்தப்படுவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். துணைவிதியின் பெயர்.

2. பிரதேச சபைகள் சட்டத்தின் 3வது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் பொதுசன சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டை பேணிவருவதை குறிக்கோளாகக் கொண்டு மேற்படி துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. நோக்கம்.

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. துணைவிதியை ஆக்குவதற்கான சட்டஏற்பாடுகள்.

4. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறான விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பித்து வருடாந்த உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளல் உரிமம் பெற்றவரின் கடமையும் பொறுப்புமாதல் வேண்டும். நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.

5. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அதே விதத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளரால் எந்தவொரு ஹோட்டலுக்கும் உரிமம் வழங்கப்படுதலாகாது.

(1) இடம் சிறப்பாக புதுப்பிக்கப்பட்ட நிலைமையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளினதும் சுவர்கள் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்துடன் கூடியதாக காணப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல்லால், சீமெந்துக் கல்லால் அல்லது செம்பூராங்கல்லால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இருபுறமும் சாந்திடப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப் பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகட்டினால் அல்லது மரப்பலகை மற்றும் ஏதேனும் உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் இந்தக் கட்டளைக்கு இணங்கியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரை நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறக்கக்கூடியதான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த ஒவ்வொரு அறையினதும் யன்னல்கள் திறக்கப்படும்போது அந்த யன்னல்களின் பலகணிகளின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவில் பதினைந்தில் ஒரு பங்குக்கு குறைவானதாக இருத்தலாகாது. எனினும், ஏதேனும் ஓர் அறை குளிரூட்டப்பட்டுள்ளபோது இந்தக் கட்டளை ஏற்படையதல்லாதிருத்தல் வேண்டும்.

(5) கூரை ஏதேனும் உறுதியான பொருளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) கூரையின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரத்திற்கு விடப்பட்ட பகுதி குறைந்தது 1.5 மீற்றராயிருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு அறையினதும் தரை சீமெந்து இடப்பட்டு சாந்திட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை சேகரிப்பதற்கு கழிவுத் தொட்டிகள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, சமையிலறையில் வைக்கப்படுகின்ற கழிவுத் தொட்டி ஈக்கள் அல்லது வேறு பூச்சிகள் பிரவேசிப்பதற்கு இயலாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை அகற்றும் பொருட்டு 14 ஆவது துணைவிதியின் கட்டளைகளின்படி செயற்படக் கூடியவாறு அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமயலறையில் பாவனைக்கு எடுக்கப்படும் ஒவ்வொரு மேசையும்-

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய மேசையின் மேற்புறம் மெருகூட்டப்பட்ட, ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு மேற்புறம் மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மேசையும் -

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய மேசையின் மேற்புறம் கண்ணாடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டுருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு மேற்புறம் கண்ணாடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) இடத்தில் பாவனைக்கு எடுக்கப்படும் நீர் மனித பாவனைக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு தடவை வீதம் இந்தத் தரச் சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீர் நிலையத்தின் பாவனைக்கு பயன்படுத்தப்படுமெனில் , அந்தத் தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுமெனில், அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுகின்ற நீர் அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்கு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவும் பொருட்டு தனியானதொரு பகுதி இடத்தில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்களினதும் ஊழியர்களினதும் பாவனைக்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒன்று வீதம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் வெவ்வேறான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) ஒவ்வொரு மலசல கூடத்தினதும் சுவர்கள் செங்கல்லால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது செம்பூராங்கல்லினால் அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோன்று மேலும் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அல்லது செம்பூராங் கற்களால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவை சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு துருப்பிடிக்காத தகட்டினால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவற்றின் மேற்புறத்தில் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனையின் பொருட்டு போதியளவு குளியலறைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு (16) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலசல கூடங்களுக்கு ஏற்புடைய கட்டளைகள் அத்தகைய குளியலறைகளின் தரைக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியினுள், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அல்லது வெண்களியினால் அமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட அல்லது செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அமைக்கப்பட்டு பீங்கான் ஓடுகள் இடப்பட்ட பேசின்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தின் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் அகற்றப்படுகின்ற கழிவுநீர் தடையின்றிச் செல்வதற்கு பொருத்தமான வடிகால் முறைமையொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(20) பிரதேச சபையினால் வடிகால் முறைமையொன்று பேணிவரப்படுவதாயிருப்பின் இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுநீர் பிரதேச சபையினால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் அத்தகைய வடிகாலமைப்பு முறைமைக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதோடு அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அத்தகைய கழிவுநீரை உள்ளீர்க்கக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(21) இடத்தில் சாதாரண தீயணைப்பு கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு இடத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிருப்பின் மேலதிகாக மின்சாரத் தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேனீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கப்படும் பகுதி ஒட்டப்படாததும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகட்டினால் அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டு அல்லது வேறேதேனும் ஊடறுத்துச் செல்லாத பொருளொன்றினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நித்திரைகொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள படுக்கையறைகளில் ஒருவர் நித்திரைகொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு குறைந்தபட்சம் நான்கு மீற்றறுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

6. வர்ணம் பூசப்பட வேண்டுமென மற்றும் 5 ஆவது துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை வீதம் வர்ணம் பூசுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

7. உரிமம்பெறப்பட்ட இடம் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் வீதம் பெருக்கிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவுநீர் செல்கின்ற வடிகால்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு நீரினால் கழுவிவிடப்படுதல் வேண்டும்.

8. உரிமம்பெற்ற இடத்தில் இரவு தங்குவதற்கு வருகின்ற ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் ஆளடையாளத்தை குறித்துக்கொள்கின்ற பதிவேடொன்று ஒவ்வொரு உரிமம்பெற்ற இடத்திலும் பேணிவரப்படுதல் வேண்டுமென்பதோடு தவிசாளரால், அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது எவரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தரால் பரிசோதிப்பதற்காக வேண்டிநிற்கின்றபோது அந்தப் பதிவேட்டை பரிசோதிப்பதற்கு இடமளித்தல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

9. உரிமம்பெற்ற இடத்தில் ஒவ்வொரு படுக்கை அறையும் வாடிக்கையாளர் ஒருவரால் பாவிக்கப்பட்டதன் பின்னர் இன்னொரு வாடிக்கையாளருக்கு பாவனைக்கு இடமளிப்பதற்கு முன்னர் அந்தப் படுக்கை அறையின் கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், போர்வைகள், துவாய்கள் மற்றும் பாவித்த வேறு துணிகள் கழுவித் துப்புரவாக்கப்பட்டதன் பின்னரேயன்றி மற்றைய வாடிக்கையாளரின் பாவனைக்கு வழங்கப்படுதலாகாது என்பதோடு பின்னர் வருகின்ற வாடிக்கையாளருக்கு குறித்த அறையை பாவனைக்கு வழங்குவதற்கு முன்னர் அந்த அறையின் யன்னல்களை குறைந்தபட்சம் நான்கு மணித்தியாலமாவது திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

10. ஒவ்வொரு உரிமம்பெற்ற இடத்தினதும் ஒவ்வொரு அறையையும், படிக்கட்டையும், வராந்தையையும், வடிகாலையும் மற்றும் அந்த இடத்திற்குரிய காணியையும் ஒவ்வொரு தினமும் மத்தியானத்திற்கு முன்னர் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

11. உரிமம்பெற்ற இடத்திலுள்ள மலசலகூடங்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு தொற்றுநீக்கிகள் இடப்படுதல் வேண்டுமென்பதோடு துர்நாற்றம் வீசாத வகையில் பேணிவரப்படுதல் வேண்டும். ஆயினும் , வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கப் பயன்படுத்தும் அறைகளிலுள்ள மலசலகூடங்கள் நாளொன்றுக்கு ஒரு தடவை துப்புரவு செய்யப்படுதல் போதுமாகும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

12. உரிமம் பெற்றப்பட்ட இடத்தில் உணவு, பானங்களைத் தயாரிப்பதற்கு, விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவை பாவனைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் தூய்மையான நீரினால் கழுவப்படுதல் வேண்டுமென்பதோடு பாவனையின் பின்னர் கழுவித் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

13. உரிமம் பெற்ற இடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றுசேர்கின்ற அனைத்து கழிவுகளையும் 14ஆவது துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி ஊடறுக்க முடியாத பொருளால் தயாரிக்கப்பட்ட பாத்திரத்தில் உடனடியாக இடுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகளை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையோ தேவைப்படின் அதற்கு மேலதிக தடவைகளோ அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு குறிப்பிட்ட பாத்திரங்களில் கழிவுகளை இடுகின்றபோது மற்றும் அகற்றுகின்றபோது தவிர ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்தப் பாத்திரங்கள் நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

14. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை -

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளரால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

15. ஒவ்வொரு உரிமம்பெற்ற இடமும் எலிகள், ஈக்கள் அல்லது வேறு பூச்சிகளின்றி பேணிவரப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தில் வைத்திருக்கப்படும் உணவு, பானங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவு, பானங்கள் குறிப்பிட்ட விலங்குகளினால் மாசடையச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் உரிமம்பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும்.

16. வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறப்படுகின்றபோது அவற்றைக் கையினால் தொடக்கூடாது என்பதோடு, அத்தகைய உணவு பரிமாறும் பொருட்டு கரண்டி அல்லது முட்கரண்டி அல்லது வேறு விதத்திலான கருவி பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

17. உரிமம்பெற்ற இடத்தில் உணவு, பானங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் மேல் ஆடைகளை வழங்குதலும், குறிப்பட்ட ஊழியர்கள் கடமையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட மேல் ஆடைகளை அணிந்திருப்பதை உறுதி செய்தலும் உரிமம் பெற்றவரின் கடமையையாதல் வேண்டும்.

18. உரிமம்பெற்ற இடத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் தூய்மையான நீர், சுத்தமான துவாய், நகங்களைத் துப்புரவு செய்வதற்கான தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

19. தவிசாளரால் குறிப்பிட்ட கருமத்தின் பொருட்டு வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும், பிரதேச சபை இடப்பரப்பினுள் ஹோட்டல் ஒன்றைப் பேணிவருதலாகாது. செய்யக்கூடாத கருமங்கள்.

20. உரிமம்பெற்ற இடத்தில் படுக்கை அறைகளாக நிச்சயித்து ஒதுக்கப்பட்டுள்ள அறைகளைத் தவிர வேறு எந்தவொரு அறையிலும் எந்தவோர் ஆளுக்கும் நித்திரைகொள்வதற்கு இடமளித்தலாகாது.

21. 5ஆவது துணைவிதியின் (23)ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச இடப்பரப்புக்கு பொருந்தாத ஆட்களின் எண்ணிக்கையானோரை எந்தவொரு படுக்கை அறையிலும் நித்திரைகொள்வதற்கு உரிமம்பெற்றவர் இடமளித்தலாகாது.

22. உரிமம்பெற்ற இடத்தில் எந்தவொரு படுக்கை அறையிலும், உணவு தயாரிக்கப்படுகின்ற இடத்திலும் அல்லது உணவு உட்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள எந்தவொரு பகுதியிலும் எந்தவொரு விலங்கையும் வைத்திருக்கலாகாது.

23. உரிமம்பெற்ற இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையில் அல்லது ஒவ்வோர் இடத்திலும் இடப்படுதலாகாது.

24. உரிமம்பெற்ற எந்தவோர் இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட பால் எதுவும் வைத்திருக்கப்படல் அல்லது விற்பனை செய்யப்படுதல் ஆகாது. இந்தத் துணைவிதியின் கருமத்தின் பொருட்டு தரம் குறைக்கப்பட்ட பால் என்பதன் மூலம் நீர் அல்லது வேறு புறம்பான பொருள் அல்லது பொருட்கள் சேர்க்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப்பொருள் 85 சதவீதத்திற்குக் குறைவான அல்லது பால் கொழுப்பு 35 சதவீதத்திற்கு குறைவான பசும்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப்பொருள் 9 சதவீதம் அல்லது பால் கொழுப்பு 7 சதவீதத்திற்கு குறைவான எருமைப் பால் கருதப்படும்.

25. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவோர் உரிமம்பெற்ற இடத்திலும் எவ்விதத்திலுமான கருமத்திலும் அல்லது அத்தகைய கருமத்தில் ஈடுபடுகின்ற எவரேனுமோர் ஆளின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி ஆள் எவரும் உரிமம்பெற்ற இடத்தில் எந்த விதத்திலுமான கருமத்தில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

(இ) உரிமம்பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

26. தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உரிமம்பெற்ற ஏதேனுமொரு இடத்தில் தயாரிக்கப்படுகின்ற அல்லது விற்பனைக்கு வைத்துள்ள ஏதேனும் உணவு வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

*உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு .*

27. இந்தத் துணைவிதியின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இடத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

28. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு ஹோட்டலை கொண்டு நடாத்துகின்ற இடம் 5 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைக்கும் இணங்கக் கொண்டு நடாத்தப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இப் பிரிவின் துணைவிதிகளின் வேறேதேனும் துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாகின்ற சந்தர்ப்பத்தில், நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைக்கச் செய்வதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.*

29. ஏதேனுமொரு ஹோட்டலை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

*அதிகாரத்தை ஒப்படைத்தல்.*

30. இதன் அதிகாரத்தை ஒப்படைத்தலைப் பொறுத்தவரை இத் துணைவிதிகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் அதன் தவிசாளர் அல்லது செயலாளர் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.*

31. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

32. இந்தப் பிரிவின் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இடத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும். *பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.*

33. துணைவிதியின் 28 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றுள்ள உரிமம்பெற்ற எவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலான விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராதல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்குக்கு மேற்படுதலாகாது.

34. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார். *முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.*

35. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். *துணைவிதிகளை மீறுதல்.*

36. 28ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற உரிமம் பெற்ற எவரேனுமொருவர் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும். *அபராதம் மற்றும் தண்டனை.*

37. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்.

38. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதிகளில்– *பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.*

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'செயலாளர்' என்பதன் மூலம் ................ பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் .......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'ஹோட்டல்' என்பதன் மூலம் விற்பனைக்காக சமைக்கப்பட்ட சோறு மற்றும் கறிகளைத் தயாரிக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமும், உணவாக உண்பதற்குப் பொருத்தமான வேறு ஏதேனுமொரு தயாரிக்கப்பட்ட உணவு வகை அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகையொன்றை விற்பனைக்காக தயாரிக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அல்லது காட்சிப்படுத்துகின்ற இடமும் அத்துடன் குறிப்பிட்ட கருமங்களுடன் வாடிக்கையாளர்கள் தங்கியிருப்பதற்கு இடவசதி செய்யப்பட்டுள்ள இடமும் எனக் கருதப்படும்.

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது

'முகாமையாளர் ' என்பதன் மூலம், அப்போதைக்கு குறித்த இடத்தின் கருமங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரும் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் அல்லது உற்பத்திப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

## அட்டவணை

**................................... பிரதேச சபை**

**வர்த்தக உரிமப்பத்திரமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பம் 20....... ஆம் ஆண்டு**

1. கைத்தொழில்/வர்த்தக உரிமையாளரின் பெயர்: ..............

2. சொந்த முகவரி: .......................................................................

3. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |

4. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:..........

5. கைத்தொழில்/வர்த்தக தொழில்முயற்சியின் பெயர் ..............

6. கைத்தொழிலின்/வர்த்தகத்தின் இயல்பு: .................................

கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறும் இடத்தின் –

(அ) முகவரி: ..............

(ஆ) வீதியின்/தெருவின் பெயர்: ...............

(இ) ஆதனவரி இல.: ...............

(ஈ) தொலைபேசி இல.: ...............

7. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடம் உரித்தாகின்ற கிராம அலுவலர் –

பிரிவின் இல.: ...............

பிரிவின் பெயர்: ...............

8. தொழில்முயற்சிப் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் தொடர்பு இல.: ..............

9. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடத்தின் முகாமையாளரின்/முகவரின் பெயர்: ...............

10. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |

11. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:..........

--------------------------

தவிசாளர்.

மேற்படி தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்/வர்த்தகம் கொண்டுநடாத்தப்படுகின்ற இடத்திற்கு 20...... ஆம் ஆண்டுக்காக கைத்தொழில்/வர்த்தக உரிமப்பத்திரமொன்றை எனக்கு வழங்கும்படி வேண்டுகிறேன். இது தொடர்பில் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன்.

திகதி : 20............... .

............................. .

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் விளையாட்டுத் திடல்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

துணைவிதியின் பெயர்.

1. இந்தத் துணைவிதியானது பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் விளையாட்டுத் திடல்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

நோக்கம்.

2. பிரதேச சபைகள் சட்டத்தின் 3வது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் பொதுமக்களின் சமுதாய அபிவிருத்திக்கான விளையாட்டுத்துறை வசதிகள் வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு மேற்படி துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (xiv) வது உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.

4. பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டுத் திடலை பயன்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரமொன்றைப் பெறுவதற்குக் கருதுகின்ற ஆள் எவரும் இந்தப் பகுதியின் துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமையத் தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. பயன்படுத்துவதற்காக விளையாட்டுத் திடலொன்றை ஒதுக்கிக்கொள்வதற்கு விண்ணப்பப் பத்திரமொன்றை சமர்ப்பித்தலானது, குறித்த ஒதுக்குதலை எதிர்பார்க்கின்ற திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவரேனும் ஆளொருவரால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுகோளானது, விளையாட்டுத் திடலை ஒதுக்கிக்கொள்வதற்குத் தேவையான திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படலாம் என்பதோடு, அத்தகைய வேண்டுகோளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற ஒதுக்குதலானது 7வது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

செய்யக்கூடாத கருமங்கள்.

6. (அ) ஆள் எவரும் பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனுமொரு விளையாட்டுத் திடலுக்கு சேதம் விளைவித்தல் அல்லது அவ்வாறு சேதம் விளைவதற்கு ஏற்பாடுசெய்தல் ஆகாது என்பதோடு விளையாட்டுத் திடலினுள் மாடுகள், பன்றிகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் அல்லது நாய்களை உட்பிரவேசிக்கச் செய்தலாகாது. மேலும், தவிசாளரிடமிருந்து பெற்ற அனுமதியின்றி எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் எந்தவொரு விளையாட்டுத் திடலினுள்ளும் உட்பிரவேசிக்கச் செய்தலாகாது.

(ஆ) குடிபோதையிலான நடத்தை, அசிங்கமான நடத்தை, போதைவஸ்துப் பாவனையுடனான நடத்தை, வெளித்தரப்பினர்களை அனாவசியமாக துன்புறுத்துதல் ஆகாது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு .

7. 4வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற ஆள் எவருக்கும் பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனுமொரு விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றபோது இதன் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

(அ) விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கின்றதான ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் பிரதேச சபை அலுவலகத்திற்கு கிடைத்த ஒழுங்குவரிசைக்கமைய ஆராயப்படுதல் வேண்டும். ஆயினும், விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துவதற்காக கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப் பத்திரங்களில் ஏதேனுமொரு விளையாட்டு அல்லது விளையாட்டுடன்

தொடர்புடைய ஏதேனும் விடயம் தொடர்பிலான விண்ணப்பப் பத்திரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்.

(ஆ) இதன் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக் கட்டண முறைக்கமைய பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு விளையாட்டுத் திடல்களை ஒதுக்குவதற்கான கட்டணம் மற்றும் வைப்புத் தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

8. இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏதேனுமொரு விளையாட்டுத் திடலில், அத்தகைய ஒதுக்குதலை இரத்துச் செய்வதற்கு எவரேனுமொரு விண்ணப்பதாரருக்கு அவசியமாகின்றபோது பின்வரும் நிபந்தனைகளின் கீழ் இடமளிப்பதற்கு தவிசாளருக்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

(அ) ஒதுக்குதலை இரத்துச்செய்வதற்கு வேண்டுகோள் விடுப்பது, விளையாட்டுத் திடலை ஒதுக்கிக்கொண்ட தினத்திற்கு–

(i) மூன்று மாதத்திற்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் ஐந்து சதவீதம்;

(ii) இரண்டு மாதங்களுக்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் பத்து சதவீதம்;

(iii) ஒரு மாதத்திற்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் பதினைந்து சதவீதம்;

(iv) பதினைந்து நாட்களுக்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் இருபத்தைந்து சதவீதம்;

(v) ஏழு நாட்களுக்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் ஐம்பது சதவீதம்;

(vi) மூன்று நாட்களுக்கு முன்னராகின்றபோது, செலுத்தப்பட்ட கட்டணத்தில் எழுபத்தைந்து சதவீதம்;

பிரதேச சபை நிதியத்தில் தடுத்துவைக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

(ஆ) ஒதுக்குதலை இரத்துச் செய்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்படுவது, விளையாட்டுத் திடலை ஒதுக்கிக்கொண்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்குக் குறைந்ததொரு காலத்திலாயின் செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிச் செலுத்தப்படலாகாது.

(இ) ஏதேனுமொரு ஒதுக்குதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளபோது அத்தகைய ஒதுக்குதலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர் உரித்துடையவராதல் வேண்டும்.

(ஈ) எவரேனுமொருவரால் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட விளையாட்டுத் திடலொன்று ஒதுக்கப்பட்ட கருமத்திற்கன்றி வேறேதேனுமொரு கருமத்திற்கு பயன்படுத்தப்படுதலாகாது.

(உ) விளையாட்டுத் திடலொன்றை ஒதுக்குவதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் எந்தவொரு காரணத்தின் மீதும் இன்னொருவருக்கு பாராதீனப்படுத்தப்படுதலாகாது.

9. எவரேனுமொருவர் விளையாட்டுத் திடலொன்றை ஒதுக்கிக்கொள்வதற்காக விடுக்கின்ற வேண்டுகோளுக்கு இடமளிக்காதுள்ளபட்சத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவாயமைகின்ற விடயங்களை குறிப்பிட்டு அதை விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலேயே விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

10. இந்தத் துணைவிதிகளில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் விளையாட்டுத் திடலொன்று ஏதேனுமொரு கருமத்திற்காக ஒதுக்கப்பட்டில்லாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய விளையாட்டுத் திடலை, விளையாட்டுக்களுக்காக அல்லது விளையாட்டுப் பயிற்சிக்காக பயன்படுத்துவதற்கு இடமளித்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

*அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.*

11. ஏதேனுமொரு விளையாட்டுத் திடலை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

12. ஏதேனுமொரு கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டுத் திடலொன்று குறிப்பிட்ட கருமத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் பிரதேச சபையில் வைப்பிலிடப்பட்டுள்ள வைப்புத் தொகையிலிருந்து–

(அ) விளையாட்டுத் திடலுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டிருப்பின் அந்த சேதத்தின் பெறுமதி, மற்றும்

(ஆ) விளையாட்டுத் திடல் ஒதுக்கப்பட்ட காலத்தை விட மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்ட காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம், கழிக்கப்பட்டதன் பின்னர் மீதியாகின்ற ஏதேனும் பணத் தொகை மாத்திரம் விண்ணப்பதாரருக்கு திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

13. (அ) இந்தத் துணைவிதிகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டுத் திடலொன்று அவ்வாறு ஒதுக்கப்பட்ட தினத்தில் பிரதேச சபையின் ஏதேனும் அத்தியாவசிய கருமத்திற்காக தேவைப்படுமிடத்து, அத்தகைய ஒதுக்குதலை இரத்துச் செய்வதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு இரத்துச்செய்யப்படுமாயின்,

அத்தகைய இரத்துச் செய்தலை விளையாட்டுத் திடல் ஒதுக்கப்பட்டுள்ள தினத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டுமென்பதோடு, அவரால் செலுத்தப்பட்டுள்ள கட்டணம் மற்றும் வைப்புத் தொகை முழுமையாக அவருக்கு திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச்செய்தலானது, ஒதுக்கப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் மூன்று நாட்களுக்குக் குறைந்ததொரு காலத்தினுள் மேற்கொள்ளப்படுதலாகாது.

(ஆ) ஏதேனுமொரு விளையாட்டுத் திடலை ஒதுக்கிக்கொண்டுள்ள ஆளொருவர் அல்லது ஒரு நிறுவனம், குறிப்பிட்ட ஒதுக்கப்பட்டுள்ள தினத்தில் அவசர மற்றும் விசேட தேவையின் மீது ஏதேனுமொரு நேரத்தினுள் விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துவதற்கு பிரதேச சபைக்கு அவசியமாகின்றபோது அந்தக் காலத்தினுள் விளையாட்டுத் திடலை விடுவித்துக்கொடுப்பதற்கு ஒதுக்கிக்கொண்டுள்ளவர் அல்லது நிறுவனம் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

*அதிகாரத்தை ஒப்படைத்தல்.*

14. இந்தத் துணைவிதிகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் இதன் அதிகாரத்தை ஒப்படைத்தலானது, அதன் தவிசாளர் அல்லது செயலாளரால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைக்கப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.*

15. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.*

16. கட்டளையொன்றின் கீழ் உரிமம் பெற்றுள்ள ஓர் இடத்தை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு உதவியளித்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும். மேலும் அத்தகைய எந்தவொரு பரிசோதனையையும் நிறுத்துவதற்கு தடையேற்படுத்தலாகாது.

*முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.*

17. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார்.

18. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். *துணைவிதிகளை மீறுதல்.*

19. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். *அபராதம் மற்றும் தண்டனை.*

20. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், *பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.*

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ................ பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் ................. இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரும் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் அல்லது உற்பத்திப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

'விளையாட்டுத் திடல்' என்பதன் மூலம், விளையாடுவதற்காக பிரதேச சபையிடமிருந்து பெறப்பட்டுள்ள ஏதேனுமொரு விளையாட்டுத் திடல் எனக் கருதப்படுவதோடு, விளையாட்டுத் திடலைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி அல்லது அதனுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டடங்கள் அல்லது அத்தகைய நிர்மாணிப்புகளின் ஒரு பகுதி அல்லது ஏதேனுமொரு பொருத்துதல் அல்லது கருவிகளும் உள்ளடங்கியததாதல் வேண்டும்.

'விளையாட்டுக்கள்' என்பதன் மூலம், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணமே எனக் கருதப்படுதல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

4 ஆவது துணைவிதி

............... **விளையாட்டுத் திடலை பயன்படுத்துவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரம்**

01. விண்ணப்பதாரரின் பெயர்: - ..............................................
முகவரி: -.................................................

தேசிய அடையாளஅட்டை இல.: -.......................................

02. விளையாட்டுத் திடலுக்கு விண்ணப்பிப்பதற்கான காரணம் : -....................................

03. தேவைப்படுகின்ற திகதியும் நேரமும்:

| திகதி முதல் | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| ....................... | ................... | ............ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். இக் கோரிக்கையின்படி குறிப்பிட்ட விளையாட்டுத் திடலை ஒதுக்கித் தருவதாயின் அந்த விளையாட்டுத் திடலிலுள்ள கட்டடங்களுக்கு, நிர்மாணிப்புகளுக்கு, கருவிகளுக்கு மற்றும் பொருத்துதல்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படும்பட்சத்தில் அதற்கான நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து பிரதேச சபை அறவிடுவதற்கு இணக்கம் தெரிவிப்பதோடு, குறிப்பிட்ட வைப்புத் தொகை அத்தகைய அறவீடுகளுக்குப் போதியதாயில்லாதவிடத்து மேலும் தேவைப்படுகின்ற பணத்தை பிரதேச சபைக்கு செலுத்துவதற்கும் இணங்குகிறேன். மேலும், விளையாட்டுத் திடல்கள் ஒழுங்குபடுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை தொடர்பிலான துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கும் இணங்குகிறேன்.

................................................. ,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:.......................... .

**இரண்டாவது அட்டவணை**

7வது துணைவிதியின் (ஆ) பந்தி

**விளையாட்டுத் திடலைப் பயன்படுத்துவதற்கு இடமளிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டண முறை**

| | விளையாட்டுத் திடலின் பெயர் | கட்டணம் ரூ. சதம் | வைப்புத் தொகை ரூ. சதம் | மேலதிக ஒரு மணித்தியாலத்திற்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 1. | | . . . . . . . | . . . . . | . . . . . . . |
| 2. | | . . . . . . . | . . . . . | . . . . . . . |
| 3. | | . . . . . . . | . . . . . | . . . . . . . |
| 4. | | . . . . . . . | . . . . . | . . . . . . . |

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உறையகங்கள் கொண்டுநடாத்தப்படுதலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதியானது .......................... பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் உறையகங்கள் கொண்டுநடாத்தப்படுவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. ........................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கொண்டுநடாத்தப்படுகின்ற உறையகங்களை பொதுசன சுகாதாரம் பேணத்தக்க வகையிலும் சுற்றாடல் நேயம்மிக்க விதத்திலும் கொண்டுநடாத்துதல் இத் துணைவிதியின் நோக்கமாகும். *நோக்கம்.*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (உ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது. *துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்*

4. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறான விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளல் உரிமம் பெற்றவரின் கடமையும் பொறுப்புமாதல் வேண்டும். *நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.*

5. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அதே விதத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளர் எந்தவொரு உறையகத்திற்கும் உரிமம் வழங்குதலாகாது.

(1) இடம் சிறப்பாக புதுப்பிக்கப்பட்ட நிலைமையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளினதும் சுவர்கள் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்துடன் கூடியதாக காணப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல்லால், சீமெந்துக் கல்லால் அல்லது செம்பூராங்கல்லால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இருபுறமும் சாந்திடப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப் பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகட்டினால் அல்லது மரப்பலகை மற்றும் ஏதேனும் உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் இந்தக் கட்டளைக்கு இணங்கியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இடத்தின் ஒவ்வொரு அறையிலும் உட்கூரை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய உட்கூரை நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறக்கக் கூடியதான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அந்த ஒவ்வொரு அறையினதும் யன்னல்கள் திறக்கப்படும்போது அந்த யன்னல்களின் பலகணிகளின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவில் பதினைந்தில் ஒரு பங்குக்கு குறைவானதாக இருத்தலாகாது. எனினும், ஏதேனும் ஓர் அறை குளிரூட்டப்பட்டுள்ளபோது இந்தக் கட்டளை ஏற்படையதாகாது.

(5) கூரை ஏதேனும் உறுதியான பொருளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) கூரையின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு, தாழ்வாரத்திற்கு விடப்பட்ட பகுதி குறைந்தது 1.5 மீற்றராயிருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு அறையினதும் தரை சீமெந்து இடப்பட்டு சாந்திட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை சேகரிப்பதற்கு கழிவுத் தொட்டிகள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு சமையலறையில் வைக்கப்படும் கழிவுத் தொட்டி ஈக்கள் அல்லது வேறு பூச்சிகள் பிரவேசிப்பதற்கு இயலாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் உருவாகின்ற கழிவுகளை அகற்றும் பொருட்டு 15 ஆவது துணைவிதியின் கட்டளைப்படி செயற்படக் கூடியவாறு அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமயலறையில் பாவனைக்கு எடுக்கப்படும் ஒவ்வொரு மேசையும்–

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய மேசையின் மேற்புறம் மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு மேற்புறம் மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டுருத்தல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மேசையும் –

(அ) மரத்தினால் செய்யப்பட்டுள்ளபோது அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய மேசையின் மேற்புறம் கண்ணாடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளபோது அதன் கால்கள் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு மேற்புறம் கண்ணடித் தகட்டினால் அல்லது மெருகூட்டப்பட்ட ஊடறுத்துச் செல்ல முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காத மற்றும் ஒட்டப்படாத உலோகத் தகட்டினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) இடத்தில் பாவனைக்கு எடுக்கப்படும் நீர் மனித பாவனைக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டுமென்பதோடு, குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு தடவை வீதம் இந்தத் தரச் சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீர் இடத்தின் பாவனைக்கு பயன்படுத்தப்படுமெனில் அந்தத் தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நீர் களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுமெனில் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்கு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவும் பொருட்டு தனியானதொரு பகுதி இடத்தில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(15) ஊழியர்களின் பாவனைக்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒன்று வீதம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் வெவ்வேறான மலசலகூடங்களும் வாடிக்கையாளர்களின் பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் வெவ்வேறான மலசல கூடமொன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) ஒவ்வொரு மலசலகூடத்தினதும் சுவர்கள் செங்கல்லால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது செம்பூராங்கல்லினால் அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அமைக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டிருத்தல்

வேண்டும். அதேபோன்று மேலும் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அல்லது செம்பூராங் கற்களால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவை சாந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு துருப்பிடிக்காத தகட்டினால் அமைக்கப்பட்ட சுவர்கள் உள்ளபோது அவற்றின் மேற்புறத்தில் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனையின் பொருட்டு போதியளவு குளியலறைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு (16) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலசல கூடங்களுக்கு ஏற்புடைய கட்டளைகள் அத்தகைய குளியலறைகளின் தரைக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியினுள், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் அல்லது வெண்களியினால் அமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட அல்லது செங்கற்களால் அல்லது சீமெந்துக் கற்களால் அமைக்கப்பட்டு பீங்கான் ஓடுகள் இடப்பட்ட பேசின்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தின் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் அகற்றப்படுகின்ற கழிவுநீர் தடையின்றிச் செல்வதற்கு பொருத்தமான வடிகால் முறைமையொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(20) பிரதேச சபையினால் வடிகால் முறைமையொன்று பேணிவரப்படுவதாயிருப்பின் இடத்திலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுநீர் பிரதேச சபையினால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் அத்தகைய வடிகாலமைப்பு முறைமைக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதோடு அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அத்தகைய கழிவுநீரை உள்ளீர்க்கக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(21) இடத்தில் சாதாரண தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு இடத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிருப்பின் மேலதிகாக மின்சாரத் தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேனீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கப்படும் பகுதி ஒட்டப்படாததும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகட்டினால் அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டு அல்லது வேறேதேனும் ஊடறுத்துச் செல்லாத பொருளொன்றினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நித்திரைகொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள படுக்கையறைகளில் ஒருவர் நித்திரைகொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு குறைந்தபட்சம் நான்கு மீற்றறுக்குக் குறையாதிருத்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு படுக்கை அறையிலும் ஆடைகளை வைத்திருப்பதற்கு அல்மாரியொன்று அல்லது இழுப்பறையொன்று, துவாய் தட்டொன்று, வதிவிடவாளர் அல்லது வதிவிடவாளர்களின் பொருட்களை வைத்திருப்பதற்கு மேசையொன்று மற்றும் மலசல கூடத்துடன் கூடிய குளியலறையொன்று காணப்படுதல் வேண்டும்.

6. இத்துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் ஒன்றுக்கு விண்ணப்பிக்கின்ற ஆள் எவரும் இப்பிரிவின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரமொன்றை தவிசாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்,

7. வர்ணம் பூசப்பட வேண்டுமென 5 (2) ஆவது துணை விதியில் கட்டளையிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை வீதம் வர்ணம் பூசுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

8. உரிமம்பெறப்பட்ட இடம் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் வீதம் பெருக்கிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு கழிவுநீர் செல்கின்ற வடிகால்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு நீரினால் கழுவிவிடப்படுதல் வேண்டும்.

9. உரிமம்பெற்ற இடத்தில் இரவு தங்குவதற்கு வருகின்ற ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் ஆளடையாளத்தை குறித்துக்கொள்கின்ற பதிவேடொன்று ஒவ்வொரு உரிமம்பெற்ற இடத்திலும் பேணிவரப்படுதல் வேண்டுமென்பதோடு தவிசாளரால், அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது எவரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தரால் பரிசோதிப்பதற்காக வேண்டி நிற்கின்றபோது அந்தப் பதிவேட்டை பரிசோதிப்பதற்கு இடமளித்தல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

10. உரிமம்பெற்ற இடத்தில் ஒவ்வொரு படுக்கை அறையும் வாடிக்கையாளர் ஒருவரால் பாவிக்கப்பட்டதன் பின்னர் இன்னொரு வாடிக்கையாளருக்கு பாவனைக்கு இடமளிப்பதற்கு முன்னர் அந்தப் படுக்கை அறையின் கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், போர்வைகள், துவாய்கள் மற்றும் பாவித்த வேறு துணிகள் கழுவித் துப்புரவாக்கப்பட்டதன் பின்னரேயன்றி மற்றைய வாடிக்கையாளரின் பாவனைக்கு வழங்கப்படுதலாகாது என்பதோடு பின்னர் வருகின்ற வாடிக்கையாளருக்கு குறித்த அறையை பாவனைக்கு வழங்குவதற்கு முன்னர் அந்த அறையின் யன்னல்களை குறைந்தபட்சம் நான்கு மணித்தியாலமாவது திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு உரிமம்பெற்ற இடத்தினதும் ஒவ்வொரு அறையையும், படிக்கட்டையும், வராந்தையையும், வடிகாலையும் மற்றும் அந்த இடத்திற்குரிய காணியையும் ஒவ்வொரு தினமும் மத்தியாணத்திற்கு முன்னர் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

12. உரிமம்பெற்ற இடத்திலுள்ள மலசலகூடங்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவை வீதம் துப்புரவு செய்யப்பட்டு தொற்றுநீக்கிகள் இடப்படுதல் வேண்டுமென்பதோடு துர்நாற்றம் வீசாத வகையில் பேணிவரப்படுதல் வேண்டும். ஆயினும் வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கப் பயன்படுத்தும் அறைகளிலுள்ள மலவலகூடங்கள் நாளொன்றுக்கு ஒரு தடவை துப்புரவு செய்யப்படுதல் போதுமாகும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

13. உரிமம் பெற்றப்பட்ட இடத்தில் உணவுபானங்களைத் தயாரிப்பதற்கு, விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவை பாவனைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் தூய்மையான நீரினால் கழுவப்படுதல் வேண்டுமென்பதோடு பாவனையின் பின்னர் கழுவித் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

14. உரிமம் பெற்ற இடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றுசேர்கின்ற அனைத்து கழிவுகளையும் 15வது துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி ஊடறுத்துக்காண முடியாத பொருளால் தயாரிக்கப்பட்ட பாத்திரத்தில் உடனடியாக இடுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகளை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையோ தேவைப்படின் அதற்கு மேலதிக தடவைகளோ அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு குறிப்பிட்ட பாத்திரங்களில் கழிவுகளை இடுகின்றபோது மற்றும் அகற்றுகின்றபோது தவிர ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்தப் பாத்திரங்கள் நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

15. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப்பொருட்களும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை –

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளரால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

16. ஒவ்வொரு உரிமம்பெற்ற இடமும் எலிகள், ஈக்கள் அல்லது வேறு பூச்சிகளின்றி பேணிவரப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தில் வைத்திருக்கப்படும் உணவு, பானங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவு, பானங்கள் குறிப்பிட்ட விலங்குகளினால் மாசடையச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் உரிமம்பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும்.

17. வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறப்படுகின்றபோது அவற்றைக் கையினால் தொடக்கூடாது என்பதோடு, அத்தகைய உணவு பரிமாறும் பொருட்டு கரண்டி அல்லது முட்கரண்டி அல்லது வேறு விதத்திலான கருவி பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) உரிமம்பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

18. உரிமம்பெற்ற இடத்தில் உணவு, பானங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் மேல் ஆடைகளை வழங்குதலும், குறிப்பட்ட ஊழியர்கள் கடமையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட மேல் ஆடைகளை அணிந்திருப்பதை உறுதி செய்தலும் உரிமம் பெற்றவரின் கடமையையாதல் வேண்டும்.

19. உரிமம்பெற்ற இடத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் தூய்மையான நீர், சுத்தமான துவாய், நகங்களைத் துப்புரவு செய்வதற்கான தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

20. தவிசாளரால், குறிப்பிட்ட கருமத்தின் பொருட்டு வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திரமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும் பிரதேச சபை இடப்பரப்பினுள் உறையகமொன்றை பேணிவருதலாகாது. செய்யக்கூடாத கருமங்கள்.

21. உரிமம்பெற்ற இடத்தில் படுக்கை அறைகளாக நிச்சயித்து ஒதுக்கப்பட்டுள்ள அறைகளைத் தவிர வேறு எந்தவொரு அறையிலும் ஆள் எவருக்கும் நித்திரைகொள்வதற்கு இடமளித்தலாகாது.

22. 5ஆவது துணைவிதியின் (23)ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச இடப்பரப்புக்கு பொருந்தாத ஆட்களின் எண்ணிக்கையானோரை எந்தவொரு படுக்கை அறையிலும் நித்திரைகொள்வதற்கு உரிமம்பெற்றவர் இடமளித்தலாகாது.

23. எந்தவொரு உறையகத்திலும் ஒற்றை அறையில் ஒருவருக்கு மேற்பட்டோரையோ இரட்டை அறையில் இருவருக்கு மேற்பட்டோரையோ மூன்று பேருக்கான அறையில் மூவருக்கு மேற்பட்டோரையோ நித்திரைகொள்வதற்கு உரிமம்பெற்றவர் இடமளித்தலாகாது. ஆயினும், இந்த எந்தவொரு அறையிலும் நித்திரைகொள்பவர் 12 வயதுக்குக் குறைவாயுள்ள ஒருவராயின் இத்துணைவிதியின் கருமத்தின் பொருட்டு அவரை ஓர் ஆளாகக் கருதுதலாகாது.

24. எந்தவொரு உறையகத்திலும் இரவு தங்கியிருக்கின்ற ஒவ்வொரு நபரும் தமது ஆளடையாளத்தை உரிமம் பெற்றவருக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, உறையகத்தில் பேணிவரப்படுகின்ற விருந்தினர் பதிவேட்டில் தமது தகவல்கள் உள்ளடக்கப்படுகின்ற நிரலில் தமது பெயரைக் கையொப்பமிடுதல் வேண்டும். மேலும், தனது ஆளடையாளத்தை சமர்ப்பிக்காத அல்லது விருந்தினர் பதிவேட்டில் தமது தகவல்கள் உள்ளடக்கப்படுகின்ற நிரலில் தமது பெயரைக் கையொப்பமிடாத ஆள் எவருக்கும் உரிமம்பெறப்பட்டுள்ள இடத்தின் எந்தவொரு பகுதியிலும் இரவு காலத்தில் தங்கியிருப்பதற்கு உரிமம்பெற்றவர் இடமளித்தலாகாது.

25. எந்தவொரு உறையகத்தையும் ஒழுக்கத்திற்கு முரணான கருமங்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்காதிருத்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டுமென்பதோடு எவரேனுமொருவர்

உறையகத்தில் ஏனைய தங்கியிருப்போருக்கு அல்லது உறையகத்திற்கு பக்கத்தில் வசிப்பவர்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடியவாறு பாடல்களை இசைத்தல் அல்லது பாடல் இசைக்கும் கருவிகளை செயற்படுத்துதல், அனாவசியமான விதத்திலான ஓசைகளை எழுப்புதல் ஆகாது.

26. உரிமம்பெற்ற இடத்தில் எந்தவொரு படுக்கை அறையிலும், உணவு தயாரிக்கப்படுகின்ற இடத்திலும் அல்லது உணவு உட்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள எந்தவொரு பகுதியிலும் எந்தவொரு விலங்கையும் வைத்திருக்கலாகாது.

27. உரிமம்பெற்ற இடத்தில் அகற்றப்படுகின்ற கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையில் அல்லது ஒவ்வோர் இடத்திலும் இடப்படுதலாகாது.

28. உரிமம்பெற்ற எந்தவொரு இடத்திலும் உள்ள படுக்கை அறைகளினுள் எந்வொரு சந்தர்ப்பத்திலும்-

(அ) ஒற்றை அறையில் ஒரு கட்டிலுக்கு மேலதிகமாகவோ,

(ஆ) இரட்டை அறையில் இரட்டைக் கட்டிலொன்று அல்லது ஒற்றைக் கட்டில்கள் இரண்டுக்கு மேலதிகமாகவோ,

(இ) மூன்று பேருக்கான அறையில் இரட்டைக் கட்டிலொன்று மற்றும் ஒற்றைக் கட்டிலொன்றுக்கு அல்லது ஒற்றைக் கட்டில்கள் மூன்றுக்கு மேலதிகமாகவோ,

(ஈ) குடும்ப அறையில் இரட்டைக் கட்டில்கள் இரண்டு மற்றும் ஒற்றைக் கட்டில் ஒன்று அல்லது இரட்டைக் கட்டில் ஒன்று மற்றும் ஒற்றைக் கட்டில்கள் மூன்று அல்லது ஒற்றைக் கட்டில்கள் ஐந்துக்கு மேலதிகமாகவோ வைத்திருத்தலாகாது.

29. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவோர் உரிமம்பெற்ற இடத்திலும் எவ்விதத்திலுமான கருமத்திலும் அல்லது அத்தகைய கருமத்தில் ஈடுபடுகின்ற எவரேனுமோர் ஆளின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி ஆள் எவரும் உரிமம்பெற்ற இடத்தில் எந்த விதத்திலுமான கருமத்தில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

30. தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உரிமம்பெற்ற ஏதேனுமொரு இடத்தில் தயாரிக்கப்படுகின்ற அல்லது விற்பனைக்கு வைத்துள்ள ஏதேனும் உணவு வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு.

31. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு உறையகத்தை கொண்டுநடாத்துகின்ற இடம் 5 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைக்கும் இணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இப் பிரிவின் துணைவிதிகளின் வேறேதேனும் துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாகின்ற சந்தர்ப்பத்தில், நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைக்கச் செய்வதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

32. ஏதேனுமொரு ஹோட்டலை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும். அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.

33. இதன் அதிகாரத்தை ஒப்படைத்தலானது இத் துணைவிதிகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் அதன் தவிசாளர் அல்லது செயலாளர் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும். அதிகாரத்தை ஒப்படைத்தல்.

34. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும். உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.

35. இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும். பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.

36. 31ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றுள்ள உரிமம்பெற்ற எவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலான விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்குக்கு மேற்படுதலாகாது.

37. 31 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற உரிமம் பெற்ற எவரேனுமொருவர் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

38. கட்டளையொன்றின் கீழ் உரிமம் பெற்றுள்ள ஓர் இடத்தை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு உதவியளித்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும். மேலும் அத்தகைய எந்தவொரு பரிசோதனையையும் நிறுத்துவதற்கு தடையேற்படுத்தலாகாது.

39. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார். முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.

40. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல்.

41. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

42. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படும்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ............... பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படும்.

'குடும்ப அறை' என்பதன் மூலம் ஒரே தடவையில் ஐந்து ஆட்கள் தங்கியிருப்பதற்கு போதியளவு இடவசதிகளையும் இரட்டைக் கட்டில்கள் இரண்டு மற்றும் ஒற்றைக் கட்டில் ஒன்று அல்லது இரட்டைக் கட்டில் ஒன்று மற்றும் ஒற்றைக் கட்டில்கள் மூன்று அல்லது ஒற்றைக் கட்டில்கள் ஐந்து கொண்ட அறையும்,

'ஒற்றைக் கட்டில்' என்பதன் மூலம் குறைந்தபட்சம் 200 சென்றி மீற்றர் நீளத்தையும் 95 சென்றி மீற்றர் அகலத்தையும் கொண்ட மெத்தையுடன் கூடிய கட்டிலும்,

'ஒற்றை அறை' என்பதன் மூலம் ஒருவருக்கு மாத்திரம் தங்கியிருப்பதற்கு போதியளவான இடவசதிகளைக் கொண்ட ஒற்றைக் கட்டிலுடன் கூடிய அறையும்,

'மூன்று பேருக்கான அறை' என்பதன் மூலம், ஒரே தடவையில் மூன்று ஆட்கள் தங்கியிருப்பதற்கு போதியளவு இடவசதிகளையும் இரட்டைக் கட்டில் ஒன்று மற்றும் ஒற்றைக் கட்டில் ஒன்று அல்லது ஒற்றைக் கட்டில்கள் மூன்று கொண்ட அறையும்,

'இரட்டைக் கட்டில்' என்பதன் மூலம், குறைந்தபட்சம் 200 சென்றி மீற்றர் நீளத்தையும் 125 சென்றி மீற்றர் அகலத்தையும் கொண்ட மெத்தையுடன் கூடிய கட்டிலும்,

'இரட்டை அறை' என்பதன் மூலம், ஒரே தடவையில் இரண்டு ஆட்கள் தங்கியிருப்பதற்கு போதியளவு இடவசதிகளையும் இரட்டைக் கட்டில் ஒன்று அல்லது ஒற்றைக் கட்டில்கள் இரண்டு கொண்ட அறையும்,

'உறையகம்' என்பதன் மூலம் உணவாக உண்பதற்குப் பொருத்தமான வேறு ஏதேனுமொரு தயாரிக்கப்பட்ட உணவு வகை அல்லது குறிப்பிட்ட கருமங்களுடன் வாடிக்கையாளர்கள் தங்கியிருப்பதற்கு இடவசதி செய்யப்பட்டுள்ள இடமும் எனக் கருதப்படும்.

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் என்பதன் மூலம், அப்போதைக்கு குறித்த இடத்தின் கருமங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரும் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் உறையகத்தின் அலுவல்கள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

அட்டவணை

**அட்டவணை 1**

(4வது துணைவிதி)

**உறையகமொன்றை கொண்டுநடாத்தும் பொருட்டு உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரம்**

1. விண்ணப்பதாரரின் பெயர்: ..........................................
முகவரி: ..............................................................................
தேசிய அடையாளஅட்டை இல.: ................................

2. உறையகத்தின் பெயர் : .......................................................
முகவரி: .............................................................................................
முகாமையாளரின்/பொறுப்பாளரின் பெயர்: .........................
.................................................................................................
தொலைபேசி இல: ...............................................

3. உரிமத்திற்கு விண்ணப்பிக்கின்ற ஆண்டு: .................

4. உறையகத்தில் –
(i) ஒற்றை அறைகளின் எண்ணிக்கை : .............................
(ii) இரட்டை அறைகளின் எண்ணிக்கை: ..........................
(iii) மூன்று பேருக்கான அறைகளின் எண்ணிக்கை : ...........
(iv) குடும்ப அறைகளின் எண்ணிக்கை : .............................
(v) ஒரே தடவையில் தங்கியிருக்க முடியுமான மொத்த எண்ணிக்கை : ........................................

5. உறையகத்தில் தொழில்புரியும் ஊழியர்கள் எண்ணிக்கை (முகாமையாளருடன்) : ...................................

6. மலசலகூடங்கள் –
(i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூட எண்ணிக்கை: ......
(ii) ஆண் ஊழியர்களுக்கான கழிவறை எண்ணிக்கை: .....
(iii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூட எண்ணிக்கை: ......
(iv) ஆண் வாடிக்கையாளர் மலசலகூட எண்ணிக்கை: ......
(v) ஆண் வாடிக்கையாளர் கழிவறை எண்ணிக்கை: .....
(vi) பெண் வாடிக்கையாளர் மலசலகூட எண்ணிக்கை: ......

7. குளியலறைகள் –
(i) ஆண்களுக்கான குளியலறை எண்ணிக்கை .................
(ii) பெண்களுக்கான குளியலறை எண்ணிக்கை .................

8. சமயலறைகளின் எண்ணிக்கை : .............................

9. நீர் வழங்கல் மூலம்: ..............................

10. திண்மக் கழிவுப் பொருள் இறுதி அகற்றுதல் நடைபெறும் முறையியல்: ......................................................................
மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். உறையகத்தின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பிலான துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு இணங்குகிறேன். குறிப்பிட்ட துணைவிதிகளின் கீழ் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உறையகத்தை கொண்டுநடாத்துவதற்காக 20 ........ ஆம் ஆண்டுக்கு உரிமப்பத்திரமொன்றை வழங்குமாறு வேண்டுகிறேன்.

திகதி: 20 ....................

..........................................................
உரிமையாளர்/முகாமையாளர்/பொறுப்பாளர் கையொப்பம்.

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் வெதுப்பகங்கள் (பாண்சாலைகள் ) பற்றிய துணைவிதிகள்

*துணைவிதியின் பெயர்.*

1. ......................... பிரதேச சபை இடப்பரப்பினுள் வெதுப்பகங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

*நோக்கம்.*

2. ......................... பிரதேச சபை இடப்பரப்பினுள் கொண்டுநடாத்தப்படுகின்ற வெதுப்பகங்களை பொதுசன சுகாதாரம் பேணத்தக்க வகையில் கொண்டுநடாத்துவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கமாகும்.

*துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

*நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.*

4. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அதே விதத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளரால் எந்தவொரு வெதுப்பகத்திற்கும் உரிமம் வழங்கப்படுதலாகாது.

(அ) வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து உணவுப்பொருட்களுக்கும் வெப்பத்தைப் பெறுகின்ற மூலம் எதுவாக இருப்பினும் இப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) வெதுப்பகம் சிறப்பாக புதுப்பிக்கப்பட்ட நிலைமையில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(ii) வெதுப்பகத்தின் ஒவ்வொரு அறையிலும் வெளியே திறக்கக் கூடியதான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த ஒவ்வொரு அறையினதும் யன்னல்கள் திறக்கப்படும்போது அந்த யன்னல்களின் பலகணிகளின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவில் பதினைந்தில் ஒரு பங்குக்கு குறைவானதாக இருத்தலாகாது.

(iii) ஒவ்வோர் அறையிலும் உட்கூரை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு வெள்ளை நிற வர்ணம் பூசப்பட்டில் வேண்டும்.

(iv) ஒவ்வோர் அறையினதும் தரை சீமெந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(v) வெதுப்பகத்தின் சூளை இடம்பெறச் செய்யப்படுகின்ற அறை நில மட்டத்திலிருந்து உட்கூரை மட்டம் வரை குறைந்தபட்சம் 3 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு செங்கல்லால் அல்லது சீமெந்துக் கல்லால் அல்லது செம்பூராங்கல்லால் அமைக்கப்பட்டு சுவரின் இருபுறமும் சாந்திடப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) வெதுப்பகத்தின் சூளை இடம்பெறச் செய்யப்பட்டுள்ள அறை தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு அறையும் நில மட்டத்திலிருந்து உட்கூரை மட்டம் வரை குறைந்தபட்சம் 2.75 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு செங்கல்லால் அல்லது சீமெந்துக் கல்லால் அல்லது செம்பூராங்கல்லால் அல்லது அலுமீனியம் அல்லது மரத்தினால் அமைக்கப்பட்டு இருபுறமும் சாந்திடப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) வெதுப்பகத்தினுள் மரத்தினால் செய்யப்பட்ட அனைத்து பொருத்துதல் பகுதிகளிலும் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) கூரை, ஏதேனும் உறுதியான பொருளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, கூரையின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 1.8 மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, தாழ்வாரத்திற்கு விடப்பட்ட பகுதி குறைந்தது 1 மீற்றராயிருத்தல் வேண்டும்.

(ix) உற்பத்திக் கருமங்களின் பொருட்டு குடிப்பதற்குத் தகுந்த தரத்திலான நீரைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) உற்பத்திக் கருமங்களின் பொருட்டு நீர் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் அறைக்கும் பாதுகாப்பான நீர் வழங்கல் குழாய் மூலம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அகற்றப்படுகின்ற கழிவுநீர் செல்வதற்குப் போதியளவு வடிகாலமைப்பு முறையொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) அகற்றப்படுகின்ற கழிவுநீர் உள்ளீர்க்கப்படக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) துணைவிதி 9 இல் கட்டளையிடப்பட்டுள்ளவாறு கழிவுப்பொருள் அகற்றப்படும் வேலைத்திட்டம் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) உரிமத்திற்காக விண்ணப்பிக்கின்ற வெதுப்பகம் விறகு பயன்படுத்தப்படும் ஒரு வெதுப்பகமாக இருக்கும் பட்சத்தில்–

(i) வெதுப்பகத்தின் சூளையின் புகைச் சாளரத்தின் மேல் விளிம்பு குறைந்தபட்சம் நில மட்டத்திலிருந்து 7.5 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாவு பிணையப்படும் அனைத்து மேசைகளும் மேற்புறம் பழுதுகள் இல்லாதவாறு மென்மையாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு பலகை மூட்டுகளுக்கு இடையே வெற்றிடங்கள் இல்லாதவாறு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் ஒட்டுதல்களின்றி மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) வெதுப்பக சூளையிலிருந்து அகற்றப்படுகின்ற எரிக்கப்பட்ட சாம்பல் மற்றும் எஞ்சியுள்ள மரத் துண்டுகளை அகற்றுவதற்கு போதியளவிலான இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய பாத்திரமொன்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) வெதுப்பக சூளையின் வெளிப்புறத்தில் வர்ணம் அல்லது சுண்ணாம்பு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) சாதாரண தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு வெதுப்பகத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிருப்பின் மேலதிகாக மின்சாரத் தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) உரிமத்திற்காக விண்ணப்பிக்கின்ற வெதுப்பகம் மின்சாரத்தில் இயங்குகின்ற வெதுப்பகமாக உள்ளபோது–

(i) வெதுப்பக கருவிகளுக்கு மின் இணைப்பை வழங்குகின்ற மின் சொருகிகள் பாதுகாப்பான நிலைமையில் இருத்தல் வேண்டும் என்பதோடு மிகை வோல்ட் நிலைமை உருவாகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது மின் கசிவு ஏற்படுகின்றபோது தன்னியக்கமாக தொடர்பை துண்டிக்கின்ற கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) வெதுப்பக வளவினுள் பொருத்தப்பட்டுள்ள மின் சுற்றுக்களின் மின் கம்பிகள் வெளியே மின் கசிவுகளற்ற குழாய்கள் அல்லது பெட்டிகளின் ஊடாக இடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, வெளியே தென்படக்கூடியதான மின் கம்பி முனைகள் அற்றதாயிருத்தல் வேண்டும்.

(iii) சாதாரண தீயணைப்புக் கருவிகளும் மின் தீயணைப்புக் கருவிகளும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணம் பூசப்பட வேண்டுமென 4 ஆவது துணைவிதியில் கட்டளையிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை வீதம் வர்ணம் பூசுதல் வேண்டும்.

6. மாவு பிணைவதற்காக பயன்படுத்தப்படும் ஒவ்வோர் அறையின் தரையையும் குறைந்தபட்சம் ஒவ்வொரு தினத்திலும் ஒரு தடவையாவது கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. வெதுப்பகம் மற்றும் அதன் சுற்றுச் சூழல், வடிகால்கள், மரத் தளபாடங்கள் மற்றும் கருவிகள் சிறந்த புதுப்பிக்கப்பட்ட நிலைமையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(அ) உரிமம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

8. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு முக அணிகலன்கள், கையுறைகள் மற்றும் தேவையான ஏனைய பாதுகாப்பு அணிகலன்களை வழங்குதலும், அந்த ஊழியர்கள் வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய அணிகலன்களை அணிந்திருப்பதையும் வெதுப்பக கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் நன்றாக உடல் முழுகி தூய்மையாக உள்ளாரென்பதையும் உறுதிசெய்துகொள்ளலும் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

9. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை –

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளர் கட்டளையிடுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. வெதுப்பகத்தின் பாவனைக்காக வைத்திருக்கப்படுகின்ற மாவு மற்றும் ஏனைய பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்க அதற்காகவே ஒதுக்கப்பட்ட தனியானதொரு அறை பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு குறிப்பிட்ட அறை போதியளவு காற்றோட்டத்துடன் கூடியதாகவும் ஈக்கள் அல்லது வேறு பூச்சிகள் மற்றும் எலிகள் உட்புக முடியாதவாறு பாதுகாக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

11. துணைவிதி 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சிய அறையில் மாவு களஞ்சியப்படுத்தப்படுகின்றபோது குறைந்தபட்சம் நில மட்டத்திலிருந்து 20 சென்றி மீற்றர் உயரமான கால்களின் மீது அமைக்கப்பட்ட மரத் தட்டொன்று பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு அந்த மரத் தட்டு வெற்றாக உள்ளபோது இலகுவாக இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக்கூடியதாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், அத்தகைய மரத் தட்டுக்கு கீழே எலிகள் அல்லது ஏதேனுமொரு வகையினதான பூச்சிகள் தங்கியிருக்க முடியாதவாறு மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, குறைந்தபட்சம் சுவரிலிருந்து 23 சென்றி மீற்றர் தூரத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

12. துணைவிதி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள மரத் தட்டை குறைந்தபட்சம் மாதத்திற்கு இரு தடவைகள் வெளியே எடுத்து துப்புரவாக்குவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

13. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒன்று வீதம் மலசலகூடம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வெவ்வேறான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய மலசலகூடங்கள் வெதுப்பகத்தின் அறைகளிலிருந்து குறைந்தபட்சம் 15 மீற்றர்கள் தூரத்தில் இடம்பெறச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

14. வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் தூய்மையான நீர், சுத்தமான துவாய், நகங்களைத் துப்புரவு செய்வதற்கான தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

15. இந்தத் துணைவிதிகளின் கீழ் உரிமம்பெறப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் நன்றாக தென்படக் கூடியதொரு இடத்தில் அங்கீகாரம் பெற்ற படிகளுடன் கூடியதான தராசு அல்லது வேறு ஏதேனுமொரு வகையினதான அங்கீகாரம் பெற்ற தராசை வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்தலும் எவரேனுமொரு வாடிக்கையாளரால் வேண்டப்படுகின்றபோது விற்பனை செய்யப்படுகின்ற அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வெதுப்பக உற்பத்தியின் நிறையை நிறுத்துப் பார்ப்பதற்கு அல்லது நிறையை நிறுத்துக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்தலும் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

16. ஏதேனுமொரு வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற வெதுப்பக உற்பத்திகள் உரிமம் பெற்றவராலேயே ஏற்றிச் செல்லப்படுமெனில் தூசு அல்லது வேறு கழிவுப்பொருட்கள் அல்லது நீர் உட்புக முடியாதவாறு மூடப்பட்ட பெட்டிகளைப் பயன்படுத்துதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

17. குறிப்பிட்ட அட்டவணை 1 இன் விண்ணப்பப்பத்திரம் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும் பிரதேச சபை இடப்பரப்பினுள் வெதுப்பகமொன்றைக் கொண்டுநடாத்துதலாகாது. செய்யக்கூடாத கருமங்கள்.

18. வெதுப்பக உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மாவு மற்றும் ஏனைய பொருட்களின் காலாவதியாகின்ற திகதி போதியளவு முன்னோக்கியதாக இருந்தாலேயன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட பொருட்களை வெதுப்பக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாகாது.

19. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவோர் உரிமம்பெற்ற இடத்திலும் எவ்விதத்திலுமான கருமத்திலும் அல்லது அத்தகைய கருமத்தில் ஈடுபடுகின்ற எவரேனுமோர் ஆளின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி ஆள் எவரும் உரிமம்பெற்ற இடத்தில் எந்த விதத்திலுமான கருமத்தில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

20. வெதுப்பக உற்பத்திகளுக்கு மனித பாவனைக்கு பொருத்தமற்ற நீர் பயன்படுத்தப்படுதலாகாது.

21. இந்தத் துணைவிதிகளின் கீழ் உரிமம் பெறப்பட்டுள்ள எந்தவோர் இடத்திலும் ஆள் எவரும் நித்திரைகொள்ளலாகாது என்பதோடு, வெதுப்பக கருமங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் அல்லது பொருட்கள் அல்லது வேறேனுமொரு பொருளை வைத்திருத்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தலாகாது. ஆயினும், வெதுப்பகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு தனியாக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள ஓய்வறை அல்லது உணவு உட்கொள்வதற்கான அறை இதில் உள்ளடங்காது.

22. வெதுப்பகத்தின் கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் நீர், நிலக்கீழ் நீர் தாங்கியொன்றில் களஞ்சியப்படுத்தப்படுமெனில் அத்தகைய தாங்கியிலிருந்து குறைந்தபட்சம் 18 மீற்றருக்கு குறைவானதொரு தூரத்தில் குப்பைக் குழி அல்லது உரக் குழி அல்லது சாம்பல் குழி இடம்பெற்றிருத்தலாகாது.

23. ஆள் எவரும் வெதுப்பகத்தினுள் புகைத்தல் அல்லது வெற்றிலை மெல்லுதல் அல்லது வேறு ஏதேனுமொரு பொருளை மெல்லுதல் அல்லது உணவருதந்துதல் ஆகாது.

*அறவீடுகள் மற்றும் கட்டணங்கள் .*

24. ஏதேனுமொரு வெதுப்பகத்தை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

*அதிகாரத்தை ஒப்படைத்தல் .*

25. இந்தத் துணைவிதியின் அலுவல்களின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அதன் தவிசாளர் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

*உரிமப்பத்திரத்தின் அல்லதுஅனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.*

26. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

*பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.*

27. இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இடத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

28. தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனுமொரு வெதுப்பகத்தில் தயாரிக்கப்படுகின்ற அல்லது விற்பனைக்கு வைத்துள்ள ஏதேனும் உணவு வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

29. இந்தத் துணைவிதிகளின் கட்டளையொன்று அல்லது கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள ஓர் இடத்தை பரிசோதிப்பதற்கு தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த ஓர் உத்தியோகத்தர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும் என்பதோடு உரிமம் பெற்ற எவரும் பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்றதான உரிய காலத்தினுள் நடைபெறுகின்ற பரிசோதனையில் பங்குபற்றுதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய எந்தவொரு பரிசோதனையையும் தடுத்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

30. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு வெதுப்பகத்தை கொண்டுநடாத்துகின்ற இடம் 4வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைக்கும் இணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இத் துணைவிதிகளின் வேறேதேனும் துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாகின்ற சந்தர்ப்பத்தில், நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற ஒரு திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான

அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைக்கச் செய்வதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

31. துணைவிதி 30 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றுள்ள உரிமம்பெற்ற எவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலான விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்குக்கு மேற்படுதலாகாது.

32. துணைவிதி 30 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற உரிமம் பெற்ற எவரேனுமொருவர் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

33. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார். முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.

34. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல் .

35. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை .

36. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படும்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ................ பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படும்.

'அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தர் எனக் கருதப்படும்.

'வெதுப்பக உற்பத்திகள்' என்பதன் மூலம், விற்பனைக்காக அல்லது வேறு எவரேனுமொரு ஆளின் கொள்வனவுக் கட்டளையின் மீது ஏதேனுமொரு வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாண், கேக், பனிஸ், பிஸ்கட் அல்லது ஏதேனுமொரு பலகாரமும்,

' வெதுப்பகம்' என்பதன் மூலம், விற்பனைக்காக அல்லது வேறு எவரேனுமொரு ஆளின் கொள்வனவுக் கட்டளையின் மீது பாண், கேக், பனிஸ், பிஸ்கட் அல்லது ஏதேனுமொரு பலகாரம் தயாரிக்கும் ஓர் இடமும் எனக் கருதப்படும் என்பதோடு, அத்தகைய உணவுகளைத் தயாரிப்பதற்கான பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கின்ற ஏதேனுமொரு இடமும்,

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் என்பதன் மூலம், அப்போதைக்கு குறித்த இடத்தின் கருமங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும் எனக் கருதப்படும்.

**அட்டவணை**

...........................பிரதேச சபை

**வர்த்தக உரிமப்பத்திரமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பம் 20....... ஆம் ஆண்டு**

1. கைத்தொழில்/வர்த்தக உரிமையாளரின் பெயர்: ................
2. சொந்த முகவரி: ................................................................
3. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |
4. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:...........
5. கைத்தொழில்/வர்த்தக தொழில்முயற்சியின் பெயர்:....................
6. கைத்தொழிலின்/வர்த்தகத்தின் இயல்பு: ...........................

   கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறும் இடத்தின் –

   (அ) முகவரி :................

   (ஆ) வீதியின்/தெருவின் பெயர்: ................

   (இ) ஆதனவரி இல.: ................

   (ஈ) தொலைபேசி இல.: ................
7. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடம் உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவின் இல.: ......

   பிரிவின் பெயர்: ................
8. தொழில்முயற்சிப் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் தொடர்பு இல.: ................
9. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடத்தின் முகாமையாளரின்/முகவரின் பெயர்: ................
10. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |
11. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:...........

தவிசாளர்.

--------------------------

மேற்படி தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்/வர்த்தகம் கொண்டுநடாத்தப்படுகின்ற இடத்திற்கு 20...... ஆம் ஆண்டுக்காக கைத்தொழில்/வர்த்தக உரிமப்பத்திரமொன்றை எனக்கு வழங்கும்படி வேண்டுகிறேன். இது தொடர்பில் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : 20................

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் விளம்பரங்கள் பற்றிய துணைவிதிகள்

துணைவிதியின் பெயர்.

1. .......................... பிரதேச சபை இடப்பரப்பினுள் விளம்பரங்கள் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

நோக்கம்.

2. ........................ பிரதேச சபை இடப்பரப்பினுள் வெளிக்காட்டப்படுகின்ற அனைத்து விளம்பரங்களையும் பொதுமக்கள் மற்றும் சுற்றாடல் நேயம்மிக்க விதத்தில் சட்ட விதிகளுக்கு இணங்க முறைசாந்த விதத்தில் ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கமாகும்.

துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (XXX) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.

4. பிரதேச சபை இடப்பரப்பினுள் விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்காக இடமளிக்கப்படுகின்ற பிரதேசங்கள் யாவையென்பதை பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்க இயலுமாதல் வேண்டும். விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்காக இடமளிக்கப்படுகின்ற பிரதேசங்கள் பற்றி காலத்திற்குக் காலம் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பற்றிய அறிவித்தலொன்றை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்தல் தவிசாளரின் கடமையாயிருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது அதில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் எதிர்வரும் தினத்தித்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

5. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமப்பத்திரத்தில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்திற்கு மாத்திரம் செல்லுபடியானதாயிருத்தல் வேண்டும்.

6. ஏதேனுமொரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான உரிமமொன்று தேவைப்படும் ஆள் ஒவ்வொருவரும், குறைந்தபட்சம் அத்தகைய விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்குக் கருதுகின்ற தினத்திற்கு 2 கடமை நாட்களுக்கு முன்னர் இதன் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விணணப்பப்பத்திரமொன்றை தவிசாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) உரிமமொன்றைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரத்துடனும் மில்லீ மீற்றர் 210 X மில்லீ மீற்றர் 297 அளவினதான காகிதத்தில் 1:1,000 அளவுத்திட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விளம்பரத்தின் மாதிரியொன்றும் விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற இடத்தின் அல்லது இடங்களின் மில்லீ மீற்றர் 210 X மில்லி மீற்றர் 297 அளவினதான காகிதத்தில் 1:1,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட நில வரைபடமும்/வரைபடங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு விளம்பரத்தின் உண்மையான நீளம் மற்றும் அகலம் அதில் குறிப்பிடப்பட்டிருத்தலும் வேண்டும்.

7. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விண்ணப்பப்பத்திரம் தொடர்பில் இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் உரிமமொன்றை வழங்குவதற்குத் தேவையான கட்டளைகளை நிறைவுசெய்துள்ளபோது அதைப் பற்றி தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரருக்கு குறிப்பிட்ட அறிவித்தல் கிடைத்ததன் பின்னர் அவர் 21 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான உரிமப்பத்திரக் கட்டணத்தையும் 17(அ) துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத் தொகையையும் பிரதேச சபைக்கு செலுத்தியதன் பின்னர் குறிப்பிட்ட உரிமத்தை வழங்குதல் தவிசாளரின் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தரின் கடமையாதல் வேண்டும்.

(அ) இத்துணைவிதியில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஏதேனுமொரு சமயக் கருமமொன்று அல்லது பணம் அறவிடாது நடத்தப்படுகின்ற ஏதேனும் கலாசாரக் கருமமொன்று தொடர்பிலான

விளம்பரம் உரிமப்பத்திரக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய விளம்பரத்திற்கு இப்பிரிவின் துணைவிதிகளின் ஏனைய ஏற்பாடுகள் அதிலுள்ளவாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

8. வெளிக்காட்டப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரத்திற்கும் வழங்கப்பட்டுள்ள உரிமத்தின் இலக்கத்தை அந்த விளம்பரத்தின் அல்லது விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்கு முன்னர் ஒவ்வொரு விளம்பரத்தினதும் வலதுபுறத்தின் கீழ் மூலையில் குறிப்பிடுதல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

9. மேற்படி துணைவிதியின் கீழ் உரிமமொன்றைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரத்தை வெளிக்காட்டுகின்ற இறுதித் திகதியின் பின்னர் நாற்பத்துஎட்டு மணித்தியாலங்கள் கடப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட விளம்பரத்தையும் அதற்குப் பயன்படுத்திய ஏனைய அனைத்துப் பொருட்களையும் அந்த இடத்திலிருந்து அல்லது இடங்களிலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் குறித்த உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

10. ஏதேனுமொரு வர்த்தக இடத்தின் பெயர், இலக்கம் மற்றும்/அல்லது முகவரியுடன் வேறு ஏதேனும் வியாபாரப் பொருள் அல்லது சேவை பற்றிய விளம்பரம் வெளிக்காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் ஏதேனுமொரு வீட்டில் ஏதேனுமொரு விதத்திலான வியாபாரப் பண்டம் அல்லது சேவை பற்றிய விளம்பரம் வெளிக்காட்டப்பட்டுள்ளபோது, அத்தகைய விளம்பரம் அல்லது விளம்பரங்கள் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டதாதல் வேண்டும். இந்தத் துணைவிதியின் ஏற்பாடுகள் தொடர்பில் உரிமம் பெற வேண்டிய ஆளாக குறிப்பிட்ட வர்த்தக இடத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அச்சந்தர்ப்பத்தில் அதன் நிர்வாகத்திற்கு பொறுப்பாக உள்ள எவரேனும் ஆளொருவர் கருதப்படுவார்.

செய்யக்கூடாத கருமங்கள்.

11.(அ) தவிசாளரால், குறிப்பிட்ட கருமத்தின் பொருட்டு இதன் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும் பிரதேச சபை இடப்பரப்பினுள் பகிரங்கமானதொரு இடத்திலிருந்து பார்க்கின்றபோது கட்புலனாகக்கூடியவாறு எந்தவொரு விதத்திலுமான விளம்பரத்தையும் வெளிக்காட்டுதலோ வெளிக்காட்டுவதற்கு ஏற்பாடு செய்தலோ ஆகாது.

(ஆ) வெளிக்காட்டுவதற்கு செல்லுபடியான உரிமமொன்றை பெற்றிருந்த போதிலும் எந்தவொரு விதத்திலுமான விளம்பரத்தையும், பகிரங்கமான ஓர் இடத்திலிருந்து பார்க்கின்றபோது கட்புலனாகக்கூடியவாறு குறிப்பிட்ட உரிமத்தில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் இடத்தில் அல்லது இடங்களில் தவிர்ந்த வேறு எந்தவோர் இடத்திலும் வெளிக்காட்டுதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் ஆகாது.

12. இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அவ்வாறே விண்ணப்பதாரரால் நிறைவு செய்யப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளரால் எந்தவொரு விதத்திலுமான விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கும் உரிமம் வழங்குதலாகாது.

(அ) இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வலயத்திற்குரிய ஓர் இடத்தில் வெளிக்காட்டுவதற்கானதொரு வேண்டுகோளாயிருத்தல் வேண்டும்.

(ஆ) விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கு விண்ணப்பிக்கின்ற இடத்திற்காக இன்னொருவருக்கு முன்னர் வழங்கியிருந்த உரிமத்தின் செல்லுபடியான காலம் முடிவடைந்திருத்தல் வேண்டும். ஆயினும், முன்னர் வழங்கப்பட்ட மற்றும் தொடர்ந்தும் செல்லுபடியான உரிமமொன்றின் கீழ் வெளிக்காட்டப்படுகின்ற ஏதேனுமொரு விளம்பரப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரம் கட்புலனாவதற்கு தடையாகாத விதத்தில் அதற்கு அண்மையில் விளம்பரப்பலகையொன்றை வெளிக்காட்டுவதற்கு உரிமமொன்றை வழங்குவதற்கு இந்த ஏற்பாடுகள் தடையாகவிருத்தலாகாது.

(இ) வெளிக்காட்டுவதற்கான உரிமத்திற்காக விண்ணப்பிக்கின்ற விளம்பரம் ஆபாசமான அல்லது வெறுக்கத்தக்க அல்லது பண்பாடற்ற அல்லது ஏதேனும் கலாசாரத்திற்கு பாதகமான அல்லது எந்தவொரு சமயத்திற்கும் அல்லது இனத்திற்கும் அல்லது இனப் பிரிவினருக்கும் பாதகமானதொரு நிலைமையைக்

கொண்டிருப்பதற்கு வாய்ப்புள்ள விதத்திலான காட்சிகள் அல்லது சொற்கள் உள்ளடங்கியதான விளம்பரமல்லாதிருத்தல் வேண்டும்.

(ஈ) இந்தத் துணைவிதியின் கீழ் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சிப்பலகையில் வெளிக்காட்டுவதற்கான உரிமமொன்றுக்கு விண்ணப்பித்துள்ள போது குறிப்பிட்ட காட்சிப் பலகையில் அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக போதியளவு இடவசதி காணப்படுதல் வேண்டுமென்பதோடு அச்சந்தர்ப்பமாகின்றபோது முன்னர் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தின் கீழ் வெளிக்காட்டப்படுகின்ற விளம்பரத்திற்காக ஒதுக்கப்பட்ட காலம் கடந்திருத்தல் வேண்டும்.

(உ) ஏதேனுமொரு எழுத்துமூலமான சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ள விதத்திலான விளம்பரமொன்றை வெளிக்காட்டுவதாக இருத்தலாகாது.

13. விளம்பரத்திற்குப் பக்கத்தால் செல்கின்ற எந்தவோர் ஆளுக்கும் அல்லது மோட்டார் வாகனத்திற்கும் தடையேற்படுகின்ற அல்லது ஆபத்து ஏற்படக்கூடிய விதத்தில் எந்தவோர் ஆளினாலும் எந்தவொரு விளம்பரமும் பொருத்தப்படுதலாகாது. அதேபோன்று மோட்டார் வாகனங்களை செலுத்திச் செல்கின்ற எவரேனுமொரு சாரதியின் கவனத்தை திசைதிருப்புகின்ற விதத்தில் அல்லது அவரது பார்வைக்கு தடையேற்படுகின்ற விதத்தில் மின் ஒளிக்கீற்றுகளைப் பொருத்துதல் அல்லது எதிரொளிக்கச் செய்தலாகாது என்பதோடு போக்குவரத்து ஆலோசனைக் குழுவின் விதப்புரையைப் பெறாது வெளிக்காட்டுதலாகாது.

14. வெளிக்காட்டுவதற்கான செல்லுபடியான உரிமமொன்றைப் பெற்று வெளிக்காட்டப்படுகின்ற எந்தவோர் அறிவித்தலுக்கும் நேரிடுகின்ற ஏதேனுமொரு சேதம் அல்லது திரிபுபடுத்தல் அல்லது அகற்றுதல் தொடர்பில் பிரதேச சபை எவ்விதத்திலுமான பொறுப்புக்கும் உள்ளாதலாகாது.

15. ஏதேனுமொரு விதத்திலான விளம்பரத்தை பொது இடத்திலுள்ள அல்லது அத்தகைய இடத்திற்கு பக்கத்திலுள்ள ஒரு மரத்தில், மரக் குற்றியில், கிளையில் அல்லது வேறேதேனுமொரு பகுதியில் அல்லது ஏதேனுமொரு பொதுக் கட்டடத்துடன் இணைத்து பொருத்துதல், ஒட்டுதல், கட்டிவைத்தல் அல்லது வெளிக்காட்டுதல் எந்தவோர் ஆளினாலும் செய்யப்படுதலாகாது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு .

16. (அ) இந்தத் துணைவிதியின் கீழ் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற எந்வோர் இடத்திலும் பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனுமொரு காணியில் அல்லது பிரதேச சபையினால் ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்ற ஓர் உடன்படிக்கையின் பிரகாரம் பெறப்படுகின்ற வேறு எவரேனும் ஆளொருவருக்கு சொந்தமான காணியில் விளம்பரங்களை வெளிக்காட்டக்கூடிய காட்சிப்பலகைகளை நிர்மாணித்து பேணிவருவதற்கு பிரதேச சபை அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் காட்சிப்பலகையில் விளம்பரமொன்றை வெளிக்காட்டுவதற்காக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணமொன்றை வெளிக்காட்டுபவரிடமிருந்து அறவிடுவதற்கு பிரதேச சபை அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணம் பற்றிய அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

17. (அ) விளம்பரமொன்றை வெளிக்காட்டுவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனுமொரு விண்ணப்பப் பத்திரம் சார்பில் உரிமமொன்றை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளவிடத்து, பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற அளவில் பிணைத் தொகையொன்றை விண்ணப்பதாரர் பிரதேச சபையில் வைப்பிலிடும் வரை தவிசாளர் குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு உரிமமொன்றை வழங்குதலாகாது.

(ஆ) ஏதேனுமொரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக உரிமமொன்றை வழங்குவதற்கு முன்னர் பிரதேச சபையில் வைப்பிலிட வேண்டியதான பிணைத் தொகை தொடர்பாக பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்தை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

18\. (அ) துணைவிதி 9 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் பின்னர் தவிசாளருக்கு எழுத்துமூலம் விடுக்கப்படுகின்ற வேண்டுகோளின் பேரில் குறிப்பிட்ட உரிமத்தை வழங்குவதற்கு முன்னர் பிரதேச சபையில் வைப்பிலிட்டுள்ள வைப்புத் தொகையை மீளப் பெறுவதற்கு உரிமம்பெற்றவரால் இயலுமாயிருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துமூல வேண்டுகோளொன்று கிடைத்ததன் பின்னர் குறித்த வைப்புத் தொகையை உரிமம்பெற்றவருக்கு விடுவிப்பதற்கு முன்னர்-

(i) துணைவிதி 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் உரிமம்பெற்றவரால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை,

(ii) விளம்பரம் வெளிக்காட்டப்பட்டுள்ளது பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சிப் பலகையிலாகின்றபோது, அந்த விளம்பரத்தை அகற்றுகின்றபோது அல்லது உரிமம்பெற்றவரால் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனுமொரு கருமத்தின் காரணமாக குறிப்பிட்ட காட்சிப் பலகைக்கு ஏதேனும் சேதம் ஏற்படவில்லை என்பதை,

உறுதிசெய்துகொள்ளல் நகர ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்றவர் 9வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட்டுள்ளார் என்பது மற்றும் பிரதேச சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்படவில்லை என்பது, (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதிசெய்யப்படும்போது தவிசாளர் திருப்தியுற்றாலன்றி குறிப்பிட்ட வைப்புத் தொகையை உரிமம்பெற்றவருக்கு முழுமையாக விடுவித்தலாகாது. உரிமம்பெற்ற எவரேனுமொருவர் 9வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு செயற்படத் தவறும்பட்சத்தில், சந்தர்ப்பத்திற்கேற்ப அந்தக் கருமத்தைச் செய்தல் அல்லது காட்சிப் பலகையைத் திருத்தியமைத்தல் அல்லது அத்தகைய இரண்டு கருமங்களுக்காகவும் பிரதேச சபை ஏற்க நேரிட்ட செலவை வைப்புத் தொகையிலிருந்து கழித்தல் வேண்டும் என்பதோடு, ஏதேனும் பணத்தொகை மீதியாக இருப்பின் அத்தொகையை மாத்திரம் உரிமம்பெற்றவருக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றுகின்றபோது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியதான பணத்தொகை வைப்பிலிடப்பட்டுள்ள பிணைத் தொகையைவிட அதிகமாயுள்ளபோது, அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட வேண்டியதான தொகையை உரிமம்பெற்றவர் பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

19\. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனுமொரு வர்த்தக நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில்முயற்சியின் இயல்பு அல்லது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் இயல்பை காட்டுகின்றதான விளம்பரப் பலகை ஒன்றை மாத்திரம் அத்தகைய வர்த்தக நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் முன்னால் வெளிக்காட்டுவதற்கும், வீட்டுப் பெயர்ப் பலகையில் மற்றும் ஏதேனுமோர் ஆதனத்தை குத்தகைக்கு விடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்காக குறிப்பிட்ட ஆதனத்தின் மீது வெளிக்காட்டப்படுகின்ற "குத்தகைக்கு விடப்படவுள்ளது" அல்லது "விற்பனை செய்யப்படவுள்ளது" அல்லது "வாடகைக்கு விடப்படவுள்ளது" எனக் குறிப்பிடப்படுகின்றதான விளம்பரம் ஒன்றை மாத்திரம் வெளிக்காட்டுவதற்கும் இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதலாகாது. ஆயினும், விளம்பரப் பலகைகள் ஒன்றுக்கு மேற்பட்டதொரு தொகை வெளிக்காட்டப்படுகின்ற ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு அதிகரிக்கப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரப்பலகையின் பொருட்டும் இந்தப் பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் அமுலாக்கப்படுதல் வேண்டும். தற்றுணிபு/ கையுதிர்ப்பு/ விடுவிப்பு .

20\. அரசாங்கம் அல்லது மாகாண சபை அல்லது பிரதேச சபையினால் வெளிக்காட்டப்படுகின்ற விளம்பரங்களைப் பொறுத்தவரை இந்தப் பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதலாகாது.

அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.

21. விளம்பரம் வெளிக்காட்டப்படுகின்ற இடம் -

(i) பிரதேச சபையினால் இந்தத் துணைவிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஒரு காட்சிப் பலகையாயுள்ளவிடத்து அந்தக் காட்சிப் பலகையில் விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக இந்தத் துணைவிதியின் 16 (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணம் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இன்றேல்,

(ii) விண்ணப்பதாரரல்லாத வேறு எவரேனுமோர் ஆளுக்கு அல்லது ஏதேனும் மேலாண்மைக்கு சொந்தமான இடத்திலாகின்றபோது அத்தகைய ஆள் அல்லது அந்த மேலாண்மை குறிப்பிட்ட விளம்பரத்தை அந்த இடத்தில் வெளிக்காட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்கின்றதான எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பித்திருத்தல் வேண்டும்.

அதிகாரத்தை ஒப்படைத்தல்.

22. இந்தத் துணைவிதிகளுக்கு ஏற்புடைய அலுவல்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் அதன் தவிசாளர் அல்லது செயலாளரால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைக்கப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

உரிமத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.

23. (அ) இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனுமொரு உரிமம், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் அல்லது விளம்பரத்தை வெளிக்காட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள காலம் பூர்த்தியடைந்ததன் பின்னர் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனுமொரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமத்தின் காலம் முடிவடைந்ததன் பின்னர் தொடர்ந்துவரும் ஆண்டினுள்ளும் குறிப்பிட்ட விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான தேவை எழுகின்றபோது அத்தகைய தொடர்ந்துவரும் ஆண்டுக்காக அத்தகைய விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக புதியதொரு உரிமம் பெறப்படுதல் வேண்டும். ஆயினும், விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக வழங்கப்படுகின்ற ஓர் உரிமத்தின் பொருட்டு தொடர்ந்துவரும் ஆண்டினுள் அறவிடுவதற்கு பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமப்பத்திரக் கட்டணம் எதுவாயிருப்பினும் குறித்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக வழங்கப்படுகின்ற புதிய உரிமத்திற்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த உரிமப்பத்திரக் கட்டணமே ஏற்புடையதாதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.

24. (அ) ஏதேனுமொரு விளம்பரத்தைப் பொருத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற எந்தவொரு விதத்திலுமான காட்சிப் பலகை, தூண், நிர்மாணிப்பு அல்லது பொருத்துதல் சுற்றாடலுக்கு சேதம் விளைவிக்கின்ற விதத்தில் அல்லது எவரேனும் ஒருவருக்கு அல்லது எவரேனுமொருவரின் ஆதனத்திற்கு ஆபத்து விளைவிக்கின்றதான அல்லது சேதம் விளைவிக்கின்றதான விதத்தில் காணப்படும் பட்சத்தில் அதனை குறிப்பிட்டதொரு காலத்தினுள் உரிய நிலைமைக்கு கொண்டுவரும்படி உரிமம்பெற்றவருக்கு அறிவிக்கின்றதான அறிவித்தலொன்றின் மூலம் கட்டளையிடுவதற்கான அதிகாரத்தை தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழானதொரு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனுமொருவர் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின்படி செயலாற்றத் தவறும் பட்சத்தில் தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் குறித்த விளம்பரத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமத்தை இரத்துச் செய்தல் மற்றும் அந்த விளம்பரத்தை கழற்றி அகற்றுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

(இ) மேற்படி (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளபோது குறித்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக பிரதேச சபையில் வைப்பிலிட்டுள்ள பிணைத் தொகை பிரதேச சபைக்கு உரித்தாதல் வேண்டும் என்பதோடு அந்த பிணைத் தொகையை வேண்டிநிற்பதற்கு ஆள் எவரும் உரிமை கொண்டவராயிருத்தலாகாது.

25. ஏதேனுமொரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஏதேனுமொரு நிர்மாணிப்பு, தூண், பொருத்துதல் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு ஏதேனுமொன்றின் காரணமாக அல்லது குறித்த விளம்பரத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்து அல்லது மறைமுகமாக சுட்டிக்காட்டப்படுகின்ற வேறேதேனும் கருத்து காரணமாக ஏதேனுமொரு தரப்பினருக்கு ஏற்படுகின்ற அல்லது ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள ஏதேனுமொரு நட்டம் அல்லது சேதம் தொடர்பில் உரிமம்பெற்றவர் பொறுப்புக்கூறும் கடப்பாடுடையவராதல் வேண்டும். முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.

26. ஏதேனுமொரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்காக இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமமொன்றின் மூலம் குறித்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை அல்லது கூற்றை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியானதொரு அனுமதி கிடைத்துள்ளதாகக் கருதலாகாது என்பதோடு அவ்வாறு அர்த்தம்கொள்ளலும் ஆகாது.

27. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார்.

28. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல்.

29. இந்தத் துணைவிதிகளின் ஏதேனுமொரு கட்டளை மீறப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அத்தகைய மீறுகை தொடர்பில் கவனத்தைச் செலுத்தச் செய்கின்றதான ஓர் அறிவித்தலுடன் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமோர் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் கொண்டிருத்தல் வேண்டும்.

30. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க , பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை .

31. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ................ பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தர் எனக் கருதப்படுவார்.

'போக்குவரத்துப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி' என்பதன் மூலம் அதே கருமத்தின் பொருட்டு தலைமைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள .................. பொலீஸ் நிலையத்தின் எவரேனுமோர் உத்தியோகத்தர் எனக் கருதப்படுவார்.

'கட்டவுட்' என்பதன் மூலம், மரம் அல்லது வேறேதேனும் பொருளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஏதேனுமொரு வரைச்சட்டகத்தில் ஒட்டப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட விளம்பரமொன்று எனக் கருதப்படும்.

'காட்சிப் பலகை' என்பதன் மூலம், மக்கள் அறிவதற்காக அல்லது கவனத்திற்காக வெளிக்காட்டப்படுகின்ற ஏதேனுமொரு விளம்பரத்தை பொருத்துவதற்கு அல்லது தக்கவைத்திருப்பதற்கு நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனுமொரு விதத்திலான நிலையான ஒரு பலகையும்,

'விளம்பரம்' என்பதன் மூலம், எவரேனும் ஆளொருவரால் ஏதேனுமொரு காணியில் அல்லது கட்டடத்தில் அல்லது நிர்மாணத்தின் மேலால் அல்லது அதன் மீது முழுமையாக அல்லது பகுதியளவில் வெளிக்காட்டப்படுகின்ற மற்றும் மக்கள் அறிவதற்காக அல்லது கவனத்திற்காக வெளிக்காட்டப்படுகின்ற, ஒட்டப்படுகின்ற, பொருத்தப்படுகின்ற, நிர்மாணிக்கப்படுகின்ற, தூக்கிவைக்கப்படுகின்ற அல்லது வேறு விதத்தில் இடம்பெறச் செய்யப்படுகின்ற விளம்பரத்தின் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்ற அல்லது ஏதேனும் எழுத்துக்கள் அல்லது சொற்கள் அல்லது படக் குறிப்புகள் உள்ளடங்கியதான விளம்பரம் அல்லது பதாகை அல்லது கட்டவுட் அல்லது ஏதேனும் விதத்திலான பிரதிமை அல்லது அறிவித்தல் அல்லது அறிவிப்பு அல்லது வர்த்தக விளம்பரம் எனக் கருதப்படும்.

அட்டவணை

**முதலாவது அட்டவணை**

............. பிரதேச சபை

**விளம்பரமொன்றை வெளிக்காட்டுவதற்கான ஓர் உரிமத்தைப் பெறுவதற்கான விண்ணப்பம்**

.................................. தவிசாளருக்கு,

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :- ..............

2. தேசிய அடையாளஅட்டை இலக்கம் :-.........................

3. தொலைபேசி இல.:- .........................................

4. விண்ணப்பதாரர் வருகைதராதிருப்பின்,

   முகவரின் பெயர் மற்றும் முகவரி :-................................

   தேசிய அடையாளஅட்டை இல.:..................................

   தொலைபேசி இல.:-....................................................

5. விளம்பரம் பற்றிய விபரம்:

வெளிக்காட்டப்படுகின்ற நீளம் x அகலம் சதுர அடி வெளிக்காட்டப்படுகின்ற விளம்பர வகை அளவு

| | இடம் | (அடி) அளவு எண்ணிக்கை | பக்கங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை (மொத்தம்) |
|---|---|---|---|---|
| i. | ............ | ................... | .................... | ....................... |
| ii. | ............. | ................... | .................... | ....................... |
| iii. | ............. | ................... | ................... | ....................... |

6. வெளிக்காட்டப்படுகின்ற விளம்பரத்தைப் பற்றிய விபரம்:- ..........................................

   (விளம்பரத்தின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

7. விளம்பரம் வெளிக்காட்டப்படும் காலம் .......... முதல் .......... வரை

........................... பிரதேச சபையின் துணைவிதிகளுக்கு இணங்க விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கும், உரிய தினத்தில் விளம்பரத்தை அகற்றிக்கொள்வதற்கும் இது தொடர்பில் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளை கடைப்பிடிப்பதற்கும், நான் இத்தால் வாக்குறுதியளிக்கிறேன். மேற்படி நிபந்தனைகள் மீறப்படுமிடத்து பிணைத் தொகை பிரதேச சபைக்கு உரித்தாகும் என்பதை அறிவேன்.

மேலும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானதெனவும், உண்மையானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். ஏதேனுமொரு விதத்தில் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் போலியானதென வெளிப்படுத்தப்படுமிடத்து, என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து பதாகைகளையும் பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கும், வெளிக்காட்டியதன் பின்னர் வெளிப்படுத்தப்படுமிடத்து, அவை அனைத்தையும் வெட்டி அகற்றி, சபைக்கு உரித்தாக்குவதற்கும் கீழ்ப்படிவேன் எனவும் இணங்குகிறேன்.

திகதி:-.................. ........................................,

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் மோட்டார் வாகனங்களை வழிப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

துணைவிதியின் பெயர் .

1. இந்தத் துணைவிதியானது .......................... பிரதேச சபை இடப்பரப்பில் வீதிகளில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் குறித்த வீதிகளில் மோட்டார் வாகனங்களின் வழிப்படுத்தலை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

நோக்கம்.

2. ......................... பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் மோட்டார் வாகனங்களில் வழிப்படுத்தலை ஒழுங்கான விதத்திலும் முறைசார்ந்த விதத்திலும் பேணிவருவதன் மூலம் பயணிகளின் பாதுகாப்பும் மோட்டார் வாகன விபத்துக்களை தடுத்தலும் நோக்கமாகும்.

துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடு கள்.

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (vii) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.

4. (அ) பிரதேச சபை இடப்பரப்பில் ஏதேனும் வீதியில் அல்லது பாதையில் ஏதேனுமொரு பகுதியில்–

(i) மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதைத் தடை செய்தல்

(ii) மட்டுப்படுத்தல்

(iii) ஒரு பக்கத்தில் மாத்திரம் மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு இடமளித்தல்

(iv) பொருட்கள் ஏற்றுவதை அல்லது இறக்குவதை தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல்

(v) பயணிகளை ஏற்றுவதை அல்லது இறக்குவதை தடைசெய்தல்

(vi) பேருந்து தரிப்பிடங்களைப் பெயரிடுதல்

(vii) ஒரு திசையில் மாத்திரம் மோட்டார் வாகனங்களைச் செலுத்திச் செல்லக்கூடியதாக வீதிகள் அல்லது பாதைகளைப் பெயரிட்டுசெலுத்திச் செல்லக்கூடிய திசையை தீர்மானித்தல்

ஆகியவற்றிற்கான அதிகாரத்தை பிரதேச சபை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பந்தியின் கீழான ஏதேனுமொரு மட்டுப்பாட்டை பிரதேசசபை செய்ததன் பின்னர் அத்தகைய மட்டுப்பாடு பற்றிய வீதித் சமிக்ஞைகளை குறித்த இடத்தில் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும். குறித்த மட்டுப்பாடுகள் பற்றிய வீதித் சமிக்ஞைகள் , மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதான அச்சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்டு 1987 , மாச்சு மாதம் 13 ஆம் திகதிய 444/18 ஆம் இலக்க பகுதி (1) தொகுதி (1) அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகளுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதோடு குறித்த கட்டளைகளுக்கு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டதாதல் வேண்டும்.

5. பிரதேச சபை இடப்பரப்பினுள் அல்லது பிரதேசசபை இடப்பரப்பிற்கு ஊடாகச் செல்கின்ற ஏதேனுமொரு வீதியில் அல்லது பாதையில் செலுத்திச் செல்லப்படுகின்ற எந்தவொரு மோட்டார் வாகனத்தினதும் சாரதியால் 4 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியின் கட்டளைகளின் கீழ் பொருத்தப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞையில் அல்லது சமிக்ஞைகளில் காட்டப்பட்டுள்ளவாறான கட்டளைகள் கடைப்பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்திலும் நிறுத்தி வைப்பதற்காக வருகின்ற மோட்டார் வாகனங்கள் உட்புகும் வாயிலிலும் வெளிச் செல்லும் வாயிலிலும் இலகுவாக வாசிக்கக் கூடிய விதத்தில் மும்மொழிகளிலும் அறிவித்தலொன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறித்த இடத்தினுள் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு வருகின்ற போது மற்றும் அதிலிருந்து வெளிச்செல்கின்றபோது செலுத்திச் செல்ல வேண்டிய திசையை இலகுவாக அடையாளம் காண்பதற்கு இயலுமானவாறு 20 சென்றி மீற்றர் அகலத்திற்கான வெள்ளை நிறக் கோட்டுடன் கூடிய ஈட்டிமுனை அடையாளம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினதும் தரைக்கு தார் இடப்பட்டு அல்லது கொங்கிறீட் இடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்தை பயன்படுத்தப்படுகின்றவர்களின் பாவனைக்காக பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் ஒதுக்கப்பட்டதான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதே போன்று இடத்தினுள் ஒன்று சேர்கின்ற நீர் இலகுவாக வெளிச்செல்வதற்குப் போதியளவில் வடிகால்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு வாகன நிறுத்துமிடத்தினதும் வளவினுள் ஒன்று சேர்கின்ற கழிவுகளை அகற்றுவதற்கும் குறித்த இடத்தில் உள்ள மலசலகூடங்களை நாளாந்தம் தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி துப்பரவு செய்தவதற்கும் எற்பாடு செய்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

9. ஒவ்வொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்திலும் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதிகளை ஒதுக்குகின்றபோது மோட்டார் வாகன நிறுத்துமிடத்திற்கு உட்பிரவேசிக்கின்ற மற்றும் அதிலிருந்து வெளியேறுகின்ற மோட்டார் வாகனங்கள் செல்வதற்காக போதிளவு ஒழுங்கைகள் ஏற்படுதப்பட்டிருத்தல் வேண்டும்.

10. ஏதேனுமொரு மோட்டார் வாகனத்தை மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் செலுத்திச் செல்கின்ற போது மற்றும் நிறுத்தி வைக்கின்றபோது அதனுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு மோட்டார் வாகனங்களுக்கு தடைகள் ஏற்படாதவாறு ஒவ்வொரு மோட்டார் வாகனத்தையும் நிறுத்தி வைப்பதற்கு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் போதியளவு இடவசதிகள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு ஒவ்வொரு மோட்டார் வாகனத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள எல்லையைக் காட்டுகின்ற 10 சென்றி மீற்றர் அகலத்துடன் கூடியதான வெள்ளை நிறக் கோட்டினால் அடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற ஏதேனுமொரு வகையினதான மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைத்தல் தொடர்பில் அறவிடுவதற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத் தொகை பற்றி குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்தின் உட்பிரவேசிக்கும் வாயிலில் தெளிவாகக் காணக்கூடியவாறு மும்மொழிகளிலும் வெளிக்காட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

12. (அ) ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற மோட்டார் வாகனங்களிலிருந்து கட்டணங்களை அறவிடும் பொருட்டு இதனகத்துப் பின்னர் "மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளர் " எனக் குறிப்பிடப்படுகின்ற –

(i) பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஊழியர் அல்லது

(ii) பிரதேச சபையினால் பகிரங்க கேள்விப் பத்திரம் கோரலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட எவரேனுமொரு வெற்றிபெற்ற கேள்விப்பத்திரதாரர் அல்லது குறிப்பிட்ட கேள்விப்பத்திரதாரரால் பெயரிடப்பட்ட அவரது உப முகவர் ஒருவர் ஈடுபடுத்தப்படலாம்.

(ஆ) ஆயினும் ஏதேனுமொரு மோட்டார் வாகனம் நிறுத்துமிடத்தில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பில் அறவிடப்படுகின்ற கட்டணம் II ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டதான கட்டணத்தொகையை விஞ்சுதலாகாது என்பதோடு ஒவ்வொரு மோட்டார் வாகனத்தையும் நிறுத்தி வைத்தல் தொடர்பில் அறவிடப்பட்ட கட்டணத் தொகையை இந்தப் பிரிவின் முதலாவது அட்டவணைக்கு அமையத் தயாரிக்கப்பட்டதான பற்றுச் சீட்டில் குறிப்பிட்டு, மோட்டார் வாகனத்தின் சாரதிக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

13. ஒவ்வொரு மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளரும் அந்தக் கடமையில் ஈடுபடுகின்ற காலத்தினுள் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்றதும் மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளரை இகுவாக இனங்காண்பதற்கு முடியுமான விதத்திலுமான ஆடையொன்றை அணிந்திருக்கச்செய்வற்கு ஏற்பாடு செய்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

14. (அ) துணை விதி 12 இன் (ஆ) பந்தியின் கீழ் நிறுத்தி வைக்க இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனுமமொரு வகையினதான மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் பிரவேசிக்கச் செல்கின்ற போது அந்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்தின்

உட்பிரவேசிக்கும் வாயிலுக்குப் பக்கத்தில் வைத்து குறித்த மோட்டார் வாகனத்தின் சாரதிக்கு இப்பிரிவின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய தயாரிக்கப்பட்ட உட்பிரவேசித்தல் அனுமதியைக் காட்டுகின்ற உட்பிரவேசிக்கும் அனுமதி அட்டையொன்றை வழங்குதல் மோட்டார் வாகன நிறுத்துமிட பொறுப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) உட்பிரவேசிக்கும் அனுமதிபத்திரத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு மோட்டார் வாகனமும் மோட்டார் வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் -

(i) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டையை மோட்டார் வாகன நிறுத்துமிட பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் ;

(ii) துணைவிதி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அளவுக்குப் பொருத்தமான மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணத்தை மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளருக்கு செலுத்துதல் ; மற்றும்

(iii) செலுத்தப்பட்ட கட்டணத்திற்குப் பொருத்தமான 12 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளல், குறித்த மோட்டார் வாகனச் சாரதியின் கடமையாதல் வேண்டும்.

15. தவிசாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் அல்லது மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளர் அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகன உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் மோட்டார் அனுமதிஅட்டையை பரிசோதிப்பதற்காக வேண்டிநிற்குமிடத்து அதனைப் பதிசோதிப்பதற்காக பெற்றுக்கொடுத்தல் குறித்த மோட்டார் வாகனத்தின் உரிமையாளரின் அல்லது சாரதியின் கடமையாதல் வேண்டும்.

16. பிரதேச சபை இடப்பரப்பினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் நிறுத்தி வைக்கப்படுகின்ற-

(அ) அரச மோட்டார் வாகனங்களுக்கு,

(ஆ) மாகாண சபையின் மோட்டார் வாகனங்களுக்கு,

(இ) மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்தின் மோட்டார் வாகனங்களுக்கு-

இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது. ஆயினும், ஏதேனுமொரு அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் ஏதேனுமொரு மோட்டார் வாகனத்திற்கு குறித்த ஏற்பாடுகள் இப்பிரிவின் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

17. ஏதெனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் உட்பிரவேசித்தல் அனுமதி அட்டையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு மோட்டார் வாகனத்தை குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு தவிசாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் அல்லது மோட்டார் வாகன நிறுத்துமிடப்பொறுப்பாளர் செயலாற்றுதல் சட்டரீதியாதல் வேண்டும்.

*செய்யக் கூடாத கருமங்கள்.*

18. துணைவிதி 5 இல் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 4 ஆவது துணிவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வீதிச் சமிக்ஞையின் மூலம் கட்டளையிடப்பட்டுள்ள எல்லைகள்-

(அ) குறித்த வீதியின் அல்லது பாதையின் ஏதேனுமொரு பகுதியில் அல்லது பிரதேச சபை இடப்பரப்பி னுள் வேறு ஏதேனுமொரு வீதிக்கு அல்லது பாதைக்கு பக்கத்திலுள்ள ஏதேனு மொரு கட்டடத்தில் அல்லது அதற்குப் பக்கத்தில் ஏற்படுகின்ற ஏதேனும் தீ அல்லது வேறு ஏதேனுமொரு அனர்த்தத்தைக் கட்டுப்படுத்துகின்ற கருமத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரதேச சபையின் தீயணைப்பு வாகனத்திற்கு அல்லது வேறு ஏதேனுமொரு வாகனத்திற்கு,

(ஆ) குறித்த வீதியில் அல்லது பாதையின் ஏதேனுமொரு பகுதியில் அல்லது பிரதேசசபை இடப்பரப்பினுள் வேறு ஏதேனுமொரு வீதியில் அல்லது பாதையில் ஏற்படுகின்ற வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக அல்லது பிரதேசசபை இடப்பரப்பினுள் ஏற்படுகின்ற வேறு ஏதேனும் எதிர்பாரா நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு எவரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தரால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விடுக்கப்படுகின்ற ஒரு கட்டளையின்படி செயலாற்றுவதற்கு-

குறித்த 5 ஆவது துணைவிதியின் கட்டளைகளை மீறுவதாகக் கருதப்படலாகாது.

19. (அ) எவரேனுமொருவர் ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கின்ற பிரதேச சபை தீர்மானித்துள்ள வகையினதான வாகமமொன்று தவிர்ந்த வேறு எவ்விதத்திலுமானதொரு வாகனம் அல்லது மோட்டார் வாகனத்தை மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைத்தல் அல்லது மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் பிரவேசிக்கச் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தலாகாது.

(ஆ) மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு வாகனத்தை குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியே எடுப்பதற்காக அந்த வாகனத்தை இயங்கச் செய்ய முடியாதுள்ளபோது , குறித்த வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக மோட்டார் வாகன நிறுத்துமிடத்திற்கு வருகின்ற வேறு ஏதேனுமொரு வாகனத்தை குறித்த மோட்டார் வாகன நிறுத்துமித்திற்கு உட்பிரவேசிக்கச் செய்ய போதியளவு இடவசதி இருந்தாலேயன்றி அவ்வாறு வருகின்ற வேறொரு வாகனத்திற்கு (அ) பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது. ஆயினும், குறித்த வாகனத்தை இழுத்துச் செல்கின்றபோது மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு வாகனங்களுக்கு எவ்விதத்திலுமான தடையோ சேதமோ ஏற்படக்கூடிய விதத்தில் இழுத்துச் செல்லலாகாது.

20. எவரேனுமொரு ஆளினால் ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள்-

(அ) வாகனங்களைக் கழுவுதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் ,

(ஆ) ஏதேனுமொரு வாகனத்தை அப்புறப்படுத்துவதற்காக குறித்த வாகனத்தை இயங்கச் செய்வதற்கான தேவையான திருத்தம் அல்லது சக்கரத்தை மாற்றுவதற்கான கருமம் தவிர்ந்த வேறு எந்தவொரு திருத்தத்தையும் மேற்கொள்ளல்,

(இ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு திருத்தத்தின்போது சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல் தவிர்ந்த அனாவசியமான அல்லது இடையூறாயிருக்கக்கூடிய ஏதேனும் சப்தத்தை ஏற்படுத்தல்,

(ஈ) குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளரின் அனுமதியின்றி மோட்டார் வாகனத்தை நிறுத்திவைத்துள்ள இடத்திலிருந்து அதே மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் வேறோரு இடத்திற்கு எடுத்துச் சென்று நிறுத்தி வைத்தல்,

(உ) குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்தின் ஒழுங்கைகள் அல்லது உட்பிரவேசித்தல் மற்றும் வெளியேறும் வாயில்கள் தடைப்படக்கூடியவாறு வாகனங்களை நிறுத்தி வைத்தல்,

(ஊ) விபத்தொன்றைத் தடுத்தல் அல்லது வானத்தின் அல்லது அதில் உள்ளோர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் தவிர்ந்த வேறேதேனும் காரணத்திற்காக ஏதேனுமொரு வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள விபத்தை அறிவிக்கும் கருவிகளை ஒலிக்கச் செய்தல்,

(எ) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அல்லது குறித்த மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் பிரவேசிக்கின்ற அல்லது அதிலிருந்து வெளியேறுகின்ற ஏதேனுமொரு வானத்தின் ஊதுகுழலை ஒலிக்கச்செய்தல்,

(ஏ) மதுபானம் அருந்துதல் அல்லது வெற்றிலை மென்றுவிட்டுத் துப்புதல் அல்லது ஆபாசமான சொற்களைப் பயன்படுத்தல் அல்லது சண்டை சச்சரவுகளில் ஈடுபடல் அல்லது பண்பாடற்ற செயல்களில் ஈடுபடல் ,

ஆகாது.

21. ஏதெனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமித்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தினதும் பாதுகாப்பு பற்றிய பொறுப்பை குறித்த வாகனத்தை மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் நிறுத்தி வைப்பவரே ஏற்றல் வேண்டுமென்பதோடு, ஏதேனுமொரு வானத்திற்கு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் நடைபெறுகின்ற ஏதேனுமொரு நட்டம் அல்லது சேதம் தொடர்பில் பிரதேச சபை அல்லது தவிசாளர் அல்லது மோட்டார் வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளர் பொறுப்புக்கூற கடப்பாடுடையவராதலாகாது.

22. துணைவிதி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் அமைந்துள்ள ஒழுங்கையில் வாகனத்தைச் செலுத்திச்செல்ல வேண்டிய திசையைக் காட்டுகின்ற அடையாளமிடப்பட்டுள்ள திசைக்கு முரணான திசையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு வாகனத்தையும் செலுத்திச் செல்லலாகாது.

23. எவரேனுமொருவர் ஏதேனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் உள்ள ஏதேனும் நிர்மாணிப்புக்கு அல்லது அதனுள் காணப்படுகின்ற ஏதேனும் கருவிக்கு சேதம் ஏற்படுத்தல் அல்லது திரிபுபடுத்தல் ஆகாது.

அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.

24. மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பில் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு கட்டணம் அறவிடப்படலாம்.

தற்றுணிபு / கையுதிர்ப்பு/ விடுப்பு.

25. (அ) பிரதேசசபை இடப்பரப்பினுள், இதனகத்துப் பின்னர் "மோட்டார் வாகன நிறுத்துமிடம்" எனக் குறிப்பிடப்படுகின்ற மோட்டார் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான கருமத்தின் பொருட்டு-

(i) பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனுமொரு காணியை; அல்லது

(ii) வேறு ஏதேனுமெரு மேலாண்மையுடன் செய்துகொள்ளப்படுகின்ற உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த மேலாண்மைக்குச் சொந்தமான ஏதேனுமொரு காணியை,

ஒதுக்குவதற்கு பிரதேச சபை அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதெனுமொரு மோட்டார் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவைப்பதற்கு இயலுமான வாகன வகை மற்றும் ஒரே தடவையில் நிறுத்தி வைக்கக்கூடியதான கூடியபட்ச வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை காலத்திற்குக் காலம் தீர்மானிக்க பிரதேச சபைக்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

26. ஒவ்வொரு மோட்டார் வாகனநிறுத்துமிடத்திலும் குறைந்த பட்சம் வாகனங்கள் உட்பிரவேசிப்பதற்காக ஒரு வாயிலும் வெளியேறுவதற்காக ஒரு வாயிலும் என்றவாறு இரண்டு வாயில்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும், மோட்டார் வாகன நிறுத்துமிடத்தினுள் வாகனங்களை திருப்புவதற்கென்றே ஒதுக்கப்பட்ட பகுதியொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பின் மற்றும் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் இரு பக்கத்திற்கும் செல்லக்கூடிய இரட்டை ஒழுங்கைகளும் வாயிலில் இடவசதியும் ஏற்படுத்தப்பட்டிருப்பின் வாகனங்கள் உட்பிரவேசிப்பதற்கும் வெளிச்செல்வதற்கும் ஒரு வாயிலை ஏற்பாடு செய்யலாம்.

துணைவிதிகளை மீறுதல்.

27. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும்.

அபராதம் மற்றும் தண்டனை.

28. இந்தத் துணைவிதிகள் மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்.

பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

29. சொற்பிரயோகம் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில்,

'தவிசாளர் ' என்பதன் மூலம் ..............பிரதேசசபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்

'பிரதேச சபை' என்பதன் மூலம் ...............பிரதேச சபை எனக் கருதப்படும் .

'செயலாளர் ' என்பதன் மூலம் ...............பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் எனக் கருதப்படுவார்.

'வீதி' என்பதன் மூலம் பிரதேச சபைக்கு சொந்தமான ஏதேனுமொரு பாதை, வீதி, நெடுஞ்சாலை, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, மரக்குற்றிப் பாலம் அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படும் என்பதோடு, பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனுமொரு பாதைக்கு, வீதிக்கு, ஒழுங்கைக்கு, தெருவுக்கு, ஒற்றையடிப்பாதைக்கு, படிக்கட்டுக்கு இணைத்து பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு தூரத்தைக் காட்டுகின்ற அடையாளம், எல்லைக்கல், எல்லைத் தூண், விளக்குக் கம்பம், பாலம், ஏதேனுமொரு விதத்திலான மதகு, கடவை, மதில், வில்வடிவப் பாலம், அணைக்கட்டு, வடிகால், சொலுசு, துணைக்கட்டு, கைப்பிடி,சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதிக்குப் பக்கத்திலுள்ள நடைபாதை ஆகியன அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

' வாகனம்' என்பதன் மூலம் மோட்டார் வாகனச் சட்டத்தில் ஏதேனுமொரு மோட்டார் வாகனத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்திற்கு பொருத்தமான ஏதேனுமோரு மோட்டார் வாகனம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

அட்டவணை

**முதலாவது அட்டவணை**

12 ஆவது துணைவிதியின் (ஆ)பந்தி

..........................பிரதேச சபை

........................... ² மோட்டார் வாகனம் நிறுத்துமிடம்

மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம்

பற்றுச்சீட்டு இலக்கம்.........................

---

மோட்டார் வாகனத்தின் இலக்கம் : ................

திகதி:................20......................

வருகைதந்த நேரம்: ............. மு.ப./பி.ப.: .................

வெளியேறிய நேரம்: மு.ப./பி.ப.:...............

அறவிடப்பட்ட கட்டணம்: ரூபா : ....................

**இரண்டாவது அட்டவணை**

*14 ஆவது துணைவிதியின் (அ) பந்தி*

*அட்டையின் முன்பக்கம்*

.................... [2] பிரதேச சபை

..........................மோட்டார் வாகனம் நிறுத்துமிடம்

**உட்பிரவேசித்தல் அனுமதி அட்டை**

*அட்டையின் பின் பக்கம்*

**இந்த அட்டையை பாராதீனப்படுத்தலாகாது.**

மோட்டார் வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து

வெளியேறுகின்றபோது திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கொண்டு திரிந்து விற்போரால் உணவு பானங்கள் விற்பனை செய்யப்படுதல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதியானது பிரதேச சபை இடப்பரப்பினுள் கொண்டு திரிந்து விற்போர்களால் உணவு பானங்கள் விற்பனை செய்யப்படுவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற கொண்டு திரிந்து விற்போர்களால் உணவு பானங்கள் விற்பனை செய்யப்படுவதை பொதுசன சுகாதாரத்திற்கு பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் சுற்றாடல் பாதுகாப்பு பேணத்தக்க விதத்திலும் முறைசார்ந்ததாகவும் ஒழுங்காகவும் பேணிவருதல் நோக்கமாகும். *நோக்கம்.*

3. பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (x) (அ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது. *துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

4. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அதே விதத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலேயன்றி தவிசாளரால் எந்தவொரு கொண்டு திரிந்து விற்போருக்கும் உணவு பானங்களை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்கப்படுதலாகாது. *நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.*

(அ) விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற உணவு அல்லது பான வகைகள் ஈக்களால், பூச்சிகளால், தூசியினால் அல்லது நீரினால் மாசடையாதவாறு மூடியதொரு பாத்திரத்தை அல்லது பெட்டியைப் பயன்படுத்துவதற்குத் தயார் செய்து வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) உணவு விற்பனையின்போது வாடிக்கையாளருக்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தும் பொருட்டு துருப்பிடிக்காத உலோகத்தினால் செய்யப்பட்ட பிடிக்கும் கருவியொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(இ) வாடிக்கையாளருக்கு அதே சந்தர்ப்பத்தில் நுகர்வதற்காக உணவு அல்லது பான வகைகள் வழங்கப்படுமாயின் அதற்காகவே ஒதுக்கப்பட்ட தனித்தனியான பாத்திரங்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) வாடிக்கையாளர்கள் நுகர்வின் பின்னர் மீதியாக வைக்கின்ற உணவுப் பகுதிகளை இடுவதற்காக தனியானதொரு பாத்திரமும் மீதியாக வைக்கின்ற பான வகைகளின் எஞ்சியுள்ளவற்றை இடுவதற்காக தனியானதொரு பாத்திரமும் என்றவாறு வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடி வைக்கக்கூடிய மூடியொன்றுடன் கூடியதாயிருத்தல் வேண்டும்.

5. கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களையும்-

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் தவிசாளர் கட்டளையிடுகின்றவாறு அகற்றுதல் வேண்டும்.

6. ஒவ்வொரு உரிமம்பெற்றவரும் கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்பிரிவின் கட்டளைகளின் கீழ் பெறப்பட்டுள்ள உரிமத்தை தம்வசமே வைத்திருத்தல் வேண்டும் என்பதோடு தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பரிசோதிப்பதற்காக வேண்டிநிற்கின்ற போது சமர்ப்பித்தில் வேண்டும்.

செய்யக்கூடாத கருமங்கள்.

7. விண்ணப்பப்பத்திரம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கமைய தவிசாளரால் இதே கருமத்தின் பொருட்டு வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்று இருந்தாலேயன்றி ஆள் எவரும் பிரதேச சபை இடப்பரப்பினுள் உள்ள ஹோட்டல், சாப்பு அல்லது வர்த்தக நிலையம் அல்லாத வேறு எந்தவொரு இடத்திலும் வியாபாரம் செய்தலாகாது.

8. கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற ஆள் எவரும் ஏதேனுமொரு பாதையில் அல்லது வீதியில் செலுத்திச் செல்லப்படுகின்ற வாகனத்திற்கு அல்லது நடந்து செல்கின்ற பயணிக்கு அல்லது ஏதேனுமொரு பொது இடத்தில் நடமாடுகின்ற மக்களுக்கு இடையூறு அல்லது ஆபத்துகள் ஏற்படாத வகையில் தமது வியாபாரத்தை மேற்கொள்வதாயிருந்தாலேயன்றி எந்தவொரு பொது இடத்திலும் கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடலாகாது.

9. தவிசாளரால் பிரதேச சபை இடப்பரப்பின் ஏதேனுமொரு பகுதியினுள் கொண்டு திரிந்து விற்பனை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளபோது, ஆள் எவரும் அப்பகுதியில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடலாகாது.

10. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமம் பெற்றுள்ளவராயிருந்த போதிலும், ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று மற்றும் கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி கொண்டு திரிந்து விற்பனை செய்வதில் ஈடுபடுதலாகாது.

11. எவரேனுமொரு கொண்டு திரிந்து விற்போரினால் விற்பனை செய்யப்படுகின்ற ஏதேனுமொரு உணவு அல்லது பான வகையிலிருந்து மாதிரியொன்றை, தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.

12. ஏதேனுமொரு கொண்டு திருந்து விற்பனை செய்வதை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.

13. (அ) இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொதுமக்கள் கூடுகின்ற எவ்விதத்திலுமான வைபவம் அல்லது கூட்டம் அல்லது ஊர்வலம் அல்லது வேறு எவ்விதத்திலுமான மக்கள் ஒன்றுகூடல் பிரதேச சபை இடப்பரப்பினுள் நடைபெறுகின்ற காலத்தினுள் கொண்டு திரிந்து விற்பனை செய்யும் பொருட்டு தவிசாளரால் தற்காலிக உரிமம் வழங்கப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும். மேலும், அத்தகைய உரிமம் எத்திகதிக்காக வழங்கப்படுகின்றதோ அத்திகதியின் பின்னர் அந்த உரிமம் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.

14. இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் எவரேனுமொரு கொண்டு திரிந்து விற்போர் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

15. (அ) தொடுகையின் மூலம் தொற்றுகின்ற ஒரு நோய் அல்லது வயிறு சார்ந்த ஒரு நோய் நிலைமை பிரதேச சபை இடப்பரப்பினுள் பரவுகின்றதென அல்லது அத்தகைய நோய் நிலைமையொன்று பரவக்கூடிய ஆபத்து

காணப்படுவதாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் தவிசாளருக்கு அறிக்கையிட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில்

(i) அது தொடர்பாக எழுத்துமூலம் விடயங்களைக் குறிப்பிட்டு இந்தப் பிரிவின் கட்டளைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு உரிமத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு,

(ii) பிரதேச சபை இடப்பரப்பின் ஏதேனுமொரு பகுதியில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதை தடை செய்வதற்கு,

(iii) (i) ஆம் பந்தியின் கீழ் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள உரிமத்தை, அவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ள காலத்தினுள் தவிசாளரின் பொறுப்பின் கீழ் எடுப்பதற்கு,

மற்றும்

(iv) உரிமம் இடைநிறுத்தப்படாதுள்ளவிடத்து, அந்த உரிமத்தின் செல்லுபடியான காலம் காலாவதியாவதற்குள்ள தினத்திற்கு முன்னர் குறித்த நோய் பரவக்கூடியதான ஆபத்து முடிவடைந்து உள்ளதாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் தவிசாளருக்கு அறிக்கையிட்டிருப்பின் இடைநிறுத்தப்பட்ட உரிமத்தை மீள்செல்லுபடியாக்குவதற்கும்,

தவிசாளர் அதிகாரம் கொண்டவராதல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் ஏதேனுமொரு உரிமம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக உரிமம் பெற்றவருக்கு நேரிடுகின்ற ஏதேனுமொரு நட்டம் அல்லது சேதம் தொடர்பில் பிரதேச சபை, தவிசாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் அல்லது சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பொறுப்புக்கூற கடப்பாடுடையவராகமாட்டார்.

(இ) (அ) பந்தியின் (ii) உப பந்தியின் கீழ் பிரதேச சபை இடப்பரப்பின் ஏதேனுமொரு பகுதியில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதை தடை செய்வதற்கு காரணமான ஆபத்து முடிவடைந்துள்ளதாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் தவிசாளருக்கு அறிக்கையிட்டிருப்பின் குறித்த பகுதியில் கொண்டு திரிந்து விற்பனை செய்வதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்படுமென உரிமம்பெற்றவர்களுக்கு அறிவித்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

16. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல்.

17. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு கொண்டு திரிந்து விற்பனை செய்தல் 4வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு கட்டளைக்கு இணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் நடைபெறாத சந்தர்ப்பம் காணப்படுமிடத்து அல்லது இந்தத் துணைவிதியின் அல்லது வேறு ஏதெனுமொரு துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாக அமைகின்றபோது உரிமம்பெற்றவருக்கு எழுத்துமூலம் செய்யப்படுகின்ற ஒரு அறிவித்தல் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உரிமம்பெற்றவருக்கு கொண்டு திரிந்து விற்பனை செய்வதற்காக வழங்கப்பட்ட உரிமத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

18. இந்தத் துணைவிதி மீறப்படுதல் தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

பொருள்கோடல் மற்றும் வரைவிலக் கணம்.

19. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில்,

'கொண்டு திரிந்து விற்பனை செய்தல்' என்பதன் மூலம், ஒரு பாத்திரத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனுமொரு தட்டில் அல்லது ஏதேனுமொரு வாகனத்தில் அல்லது துவிச்சக்கர வண்டியில், அல்லது வண்டியில், அல்லது கை வண்டியில் வைத்திருந்து பொதுமக்களின் நுகர்வுக்காக விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது அவ்வாறு காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்ற உணவு வகை அல்லது பான வகையின் வியாபாரம் கருதப்படும் என்பதோடு அவ்வாறு இடத்திற்கிடம் எடுத்துச் சென்று அல்லது ஏதேனுமொரு இடத்தில் இருந்து நடத்தப்படும் வியாபாரமும் இதில் உள்ளடங்குதல் வேண்டும்.

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையில் அப்போதைக்கு தவிசாளர் பதவியை வகிக்கும் ஆள் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ............... பிரதேச சபையில் அப்போதைக்கு செயலாளர் பதவியை வகிக்கும் ஆள் கருதப்படுவார்.

'சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்' என்பதன் மூலம், ஒரு சபையின் எவரேனுமொரு சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் கருதப்படுவார் என்பதோடு அந்தச் சபையின் எவரேனுமொரு உதவி சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் அந்தச் சுகாதார மருத்துவ உத்தியோகத்தராக அல்லது உதவி சுகாதார மருத்துவ உத்தியோகத்தராக செயலாற்றும் பொருட்டு நியமிக்கப்பட்ட எவரேனுமோர் ஆள் இதில் உள்ளடங்குவார்.

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் மீன் விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதியானது ...................... பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் மீன் விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம். *துணைவிதியின் பெயர்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3வது பிரிவின் பிரகாரம் .............. பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் பொதுசன சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டை பேணிவருவதை நோக்கமாகக் கொண்டு மேற்படி துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது. *நோக்கம்.*

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) ஒ உப பிரிவின் கீழ் .............................. பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது. *துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

4. உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்கின்ற விற்பனை நிலையம் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குவதாயிருந்தாலேயன்றி தவிசாளரால் ஆள் எவருக்கும் மீன் விற்பனை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் வழங்கப்படுதலாகாது. *நிறைவேற்றப் படவேண்டிய கருமங்கள்.*

(அ) விற்பனைக்காக மீனை வெளிக்காட்டுகின்ற பகுதி பீங்கான் ஓடுகள் அல்லது சாந்து பூசப்பட்ட சீமெந்து அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகடு இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) மீனை விற்பனைக்காக வெளிக்காட்டுகின்ற இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்துகின்ற இடத்தின் தரை சீமெந்து சாந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) கழிவு நீர் செல்வதை வசதிப்படுத்துவதற்காக அவசியமான சரிவுடன் கூடியதாக சீமெந்தினால் மெருகூட்டப்பட்ட அல்லது பீங்கான் ஓடு இடப்பட்ட வடிகால்கள் காணப்படுதல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகால்களின் ஊடாக செல்கின்ற கழிவு நீர் ஏதேனும் பொது நீரோட்டங்களில் சென்று கலப்பதைத் தவிர்ப்பதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய கழிவுநீரை, நீரை உள்ளீர்க்கக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) மீன் விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்சேதன கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு போதியளவு பாத்திரங்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் இறுதியில் அத்தகைய கழிவுப்பொருட்களை நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது .......................... பிரதேச சபையினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற கட்டளைகளுக்கு இணங்க .......................... பிரதேச சபையின் கழிவுகளை சேகரிக்கும் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(ஊ) நிலையத்தில் சேவையாற்றுகின்ற ஆட்களின் பயன்பாட்டிற்காக போதியளவு நீர் அடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் காணப்படுதல் வேண்டுமென்பதோடு மலசலகூடத்தை பயன்படுத்தியதன் பின்னர் பாவனைக்குப் பொருத்தமான துப்புரவேற்பாட்டு முறைகள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) உரிமம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையமும் நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சிகள் அற்றதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

5. உரிமம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்தினதும் நாளாந்த அலுவல்களின் இறுதியில் அவ்விடத்தின் தரையையும், சுவர்களின் பீங்கான் ஓடுகள் இடப்பட்ட அல்லது சீமெந்துச் சாந்து இடப்பட்ட பகுதிகளையும் மீனை அறுப்பதற்காக பயன்படுத்தும் பகுதிகளையும், கருவிகளையும், மீனை விற்பனை செய்வதற்காக வெளிக்காட்டுகின்ற இடத்தையும் தொற்றுநீக்கித் திரவம் இட்டு கழுவித் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6. ஈக்கள் அல்லது பூச்சிகள் அல்லது வேறு எந்தவொரு விலங்கும் உட்புக முடியாதவாறு நன்றாக மூடிவைக்கக்கூடிய வண்டியில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனுமொரு பாத்திரத்தில் மூடப்பட்ட விதத்தில் ஏற்றிச் செல்வதாயிருந்தாலன்றி ஆள் எவரும் எந்தவொரு மீன் வகையையும் ஏற்றிச் செல்லலாகாது என்பதோடு அத்தகைய மீனை ஏற்றிச் சென்றதன் பின்னர் அவ்வாறு மீனை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்திய வாகனம் அல்லது பெட்டி அல்லது வேறு பாத்திரம் தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி நன்றாகக் கழுவிவிடப்படுதல் வேண்டும்.

7. உரிமம் பெற்ற எந்தவொரு மீன் விற்பனை நிலையத்தையும் மற்றும் அதனைச் சுற்றிலுமுள்ள வடிகால்களையும், மீன் களஞ்சியப்படுத்தல், தயார்செய்தல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து பாத்திரங்களையும் கருவிகளையும் சிறந்த விதத்தில் திருத்தியமைத்து, துர்நாற்றமின்றி வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

8. மீன் விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

9. மீன் விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு முக அணிகலன்கள், கையுறைகள் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகலன்களை வழங்குதலும், அத்தகைய ஊழியர்கள் மீன் விற்பனை நிலையத்தில் சேவையிலீடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய பாதுகாப்பு அணிகலன்களை அணிந்திருப்பதை உறுதிசெய்தலும் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

10. உரிமம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆளினாலும் பயன்படுத்துவதற்காக சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவத்தை வைத்திருத்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

11. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களையும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை -

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை .......................... பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளர் கட்டளையிடுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

12. தவிசாளரால் குறிப்பிட்ட கருமத்திற்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமம் இருந்தாலேயன்றி ஆள் எவரும் ......................... பிரதேச சபைப் பிரதேசத்தினுள் மீன் விற்பனை செய்தலாகாது.

13. உரிமம்பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார அலுவல்கள் முடிவடைந்ததன் பின்னர் விற்பனை செய்ய முடியாது எஞ்சுகின்ற மீன்கள் அதிகுளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் மற்றும் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து மறுநாள் மீன் விற்பனை நிலையத்தை திறக்கும் சந்தர்ப்பம் வரை அத்தகைய அதிகுளிர்சாதனப் பெட்டி உரியவாறு இயங்கிக் கொண்டிருந்தாலேயன்றி எஞ்சுகின்ற எந்தவொரு மீன் வகையையும் மறுநாள் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டுதல் அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டியில் வைத்திருத்தல் அல்லது உரிமம்பெற்ற இடத்தில் வைத்திருத்தல் ஆகாது.

செய்யக்கூடாத கருமங்கள்.

14. உரிமம்பெற்ற இடத்தில் மீனை இட்டுவைப்பதற்கு அல்லது தயார் செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு பயன்படுத்துகின்ற கருவிகள் அல்லது பாத்திரங்களைத் தவிர எந்தவொரு பொருளையும் ஆடையையும் அல்லது நித்திரை கொள்கின்ற விரிப்பையும் அல்லது வேறு எந்தவொரு பொருளையும் வைத்திருத்தலாகாது.

15. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் எவ்விதத்திலுமான வியாபாரத்திலும் அல்லது அவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடுகின்ற ஆள் எவரினதும் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி எவரும் மீன் விற்பனை நிலையத்தில் எந்த விதத்திலுமான கருமத்தில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

16. கழிவுநீர் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீரை உள்ளீர்க்கக்கூடியதான குழி காற்றோட்டத்திற்கு திறந்துவிடப்பட்டிருத்தலாகாது.

17. (i) இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கின்ற எவரேனுமொருவருக்கு ஓர் அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்றபோது இச்சட்டவாக்கத்தின் நிபந்தனைகளை நிறைவு செய்திருந்தாலேயன்றி தவிசாளர் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதலாகாது.

(ii) ஆளுகைப் பிரதேசத்தினுள் மீன் விற்பனை நிலையத்தை கொண்டுநடாத்துவதை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பில் காலத்திற்குக் காலம் நியாயமானதும் சட்டரீதியானதுமான முன்மொழிவுகள், உடன்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை வெளியிடுதல் சபையின் கடமைப்பொறுப்பாதல் வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு.

(iii) உரிமமொன்றை பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் நிராகரிக்கப்படின் அதற்குக் காரணமாயமைந்த விடயங்களை தவிசாளர் இயலுமான விரைவில் விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

18. உரிமம் பெற்றவர் இந்தத் துணைவிதியை மீறுதல் அல்லது முறித்தல் காரணமாக குறிப்பிட்டதொரு காலத்திற்கு உரிமத்தை இடைநிறுத்தும் உரிமை மற்றும் அவ்வாறானவர்களுக்கு மீண்டும் உரிமமொன்றை வழங்குவதையிட்டு பரிசீலித்தல் மற்றும் தொடர்ந்து உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதாயிருப்பின் அத்தகைய

தற்றுணிபு/ கையுதிர்ப்பு/ விடுவிப்பு.

உரிமம் பெற்றவருக்கு மீண்டும் உரிமமொன்றை வழங்காதிருத்தல் பற்றிய அதிகாரத்தை சபை கொண்டிருத்தல் வேண்டும்.

19. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு மீன் விற்பனை நிலையத்தை கொண்டுநடாத்துகின்ற இடம் 4வது துணைவிதியின் அல்லது வேறு ஏதேனுமொரு துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாக உள்ளவிடத்து, நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற தினத்திற்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்றதான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்ற அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைப்பதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

20. மேலே குறிப்பிடப்பட்டவாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமம் பெற்றவரினதும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிக்க தவிசாளர் அதிகாரம் கொண்டவராதல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு (14) தினங்களுக்கு மேற்பட்டதாயிருத்தலாகாது.

21. மேலே குறிப்பிடப்பட்டவாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமம் பெற்றவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்து விதிக்கப்பட்டுள்ள தினத்திற்கு அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அந்த அறிவித்தலில் நிச்சயிக்கப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுவதற்குத் தவறியுள்ளவிடத்து, அந்த இடத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் தவிசாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

அறவீடுகள் மற்றும் கட்டணங்கள்.

22. ஏதேனுமொரு மீன் விற்பனை நிலையத்தை கொண்டுநடாத்தும் பொருட்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 149ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரம் கொண்டதாதல் வேண்டும்.

அதிகாரத்தை ஒப்படைத்தல்.

23. இந்தத் துணைவிதியின் அலுவல்களின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அதன் தவிசாளர் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

உரிமத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம் .

24. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ, அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

பரிசோதனை நடைமுறையும் மேலாண்மையும்.

25. இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு செயலாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு, பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் நிலையத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

26. கட்டளையொன்றின் கீழ் உரிமம் பெற்றுள்ள ஓர் இடத்தை பரிசோதிப்பதற்கு உதவியளித்தல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும். அதேபோன்று அத்தகைய எந்தவொரு பரிசோதனையையும் நிறுத்துவதற்கு தடையேற்படுத்தலாகாது.

27. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு மீன் விற்பனை நிலையத்தை கொண்டுநடாத்துகின்ற இடம் 4வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு கட்டளைக்கு இணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இப் பிரிவின் துணைவிதிகளின் வேறேதேனும் துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாகின்ற சந்தர்ப்பத்தில், நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான

அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம் பெற்றவருக்கு ஒப்படைக்கச் செய்வதற்கு செயலாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

28. (i) செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உரிமம்பெற்ற ஏதேனுமொரு இடத்தில் விற்பனைக்கு வைத்துள்ள ஏதேனும் மீன் வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

(ii) மேலே குறிப்பிடப்பட்டவாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றுள்ள உரிமம்பெற்ற எவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும்.

(iii) இவ்வாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உரிமம் பெற்ற எவரேனுமொருவர் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்ட உரிமத்தை தவிசாளர் செல்லுபடியற்றதாக்குதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

29. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்தி தீர்வு வழங்குவார். முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமுறை.

30. இந்தத் துணைவிதிகளை மேற்பார்வை செய்கின்ற அதிகாரம் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோத்தருக்கு உரித்தானதாதல் வேண்டும். மேற்பார்வை .

31. ஏற்றுக்கொள்ளக்கூடியதான விடயங்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கான அதிகாரத்தை தவிசாளர் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்கு மேற்பட்டதாயிருத்தலாகாது. துணைவிதிகளை மீறுதல்.

32. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு ஏற்பாடும் முறிக்கப்படுதல் அல்லது மீறப்படுதல் பற்றிய தவறொன்று தொடர்பில் தகுந்த நீதித்துறை அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) வது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே கூறப்பட்ட உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

ஏதேனுமொரு பிரதேச சபையினால் இந்தத் துணைவிதிகள் உரியவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதியில், பொருள்கோடல் மற்றும் வரைவிலக் கணம்.

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையின் தவிசாளர் எனக் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ஏதேனும் ................ பிரதேச சபையின் செயலாளர் எனக் கருதப்படுவார்.

'மீன் விற்பனை நிலையம்' என்பதன் மூலம் விற்பனைக்காக மீனைக் வெளிக்காட்டுகின்ற இடம் எனக் கருதப்படும்.

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் எனக் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் என்பதன் மூலம், அப்போதைக்கு குறித்த இடத்தின் கருமங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே கருமத்தின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ....................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரும் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

**அட்டவணை**

வர்த்தக உரிமமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பம் 20.................... ஆம் ஆண்டு

1. கைத்தொழில்/வர்த்தக உரிமையாளரின் பெயர்: ..........................................................
2. சொந்த முகவரி: ..........................................
3. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |
4. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:..........
5. கைத்தொழில்/வர்த்தக தொழில்முயற்சியின் பெயர்:

   ..................................................................................................
6. கைத்தொழிலின்/வர்த்தகத்தின் இயல்பு: ..........................................

   கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறும் இடத்தின் –

   (அ) முகவரி : ..........................................

   (ஆ) வீதியின்/தெருவின் பெயர்: ..........................................

   (இ) ஆதனவரி இல.: ..........................................

   (ஈ) தொலைபேசி இல.: ..........................................
7. கைத்தொழில்/ வர்த்தகம் நடைபெறுகின்ற இடம் உரித்தாகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவின் இல.: ..........................................

   பிரிவின் பெயர்: ..........................................
8. தொழில்முயற்சிப் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் தொடர்பு இல.: ..........................................
9. கைத்தொழில்/வர்த்தகம் நடைபெறுகின்ற இடத்தின் முகாமையாளரின்/முகவரின்

   பெயர்: ..........................................
10. தேசிய அடையாளஅட்டை இல.: | | | | | | | | | | |
11. தொலைபேசி இல.: செல்லிட: .............. வதிவிட:..........

--------------------------

தவிசாளர்

மேற்படி தகவல்களைக்கொண்ட கைத்தொழில்/ வர்த்தகம் கொண்டுநடாத்தப்படுகின்ற இடத்திற்கு 20...... ஆம் ஆண்டுக்காக கைத்தொழில்/வர்த்தக உரிமமொன்றை எனக்கு வழங்கும்படி வேண்டுகிறேன். இது தொடர்பில் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன்.

திகதி : 20......................

....................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம் .

## ................ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி

துணைவிதியின் பெயர் .

1. இந்தத் துணைவிதி . பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

நோக்கம் .

2. ............ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கொண்டுநடாத்தப்படுகின்ற இறைச்சி விற்பனையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் இதன் நோக்கமாகும்.

துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

3. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) ஒ உப பிரிவின் கீழ் பிரதேச ................ சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தத் துணைவிதி ஆக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்ற வேண்டிய கருமங்கள்.

4. உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்கின்ற விற்பனை நிலையம் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குவதாயிருந்தாலேயன்றி தவிசாளரால் ஆள் எவருக்கும் இறைச்சி விற்பனை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் வழங்கப்படுதலாகாது.

(அ) விற்பனைக்காகவே வெளிக்காட்டுகின்ற பகுதி பீங்கான் ஓடுகள் அல்லது சாந்து பூசப்பட்ட சீமெந்து அல்லது துருப்பிடிக்காக உலோகத் தகடு இடப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) இறைச்சி விற்பனைக்காக வெளிக்காட்டுகின்ற இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்துகின்ற இடத்தின் தரை சீமெந்து சாந்தினால் மெருகூட்டப்பட்டு அல்லது பீங்கான் ஓடு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) கழிவு நீர் செல்வதை வசதிப்படுத்துவதற்காக அவசியமான சரிவுடன் கூடியதாக சீமெந்தினால் மெருகூட்டப்பட்ட அல்லது பீங்கான் ஓடு இடப்பட்ட வடிகால்கள் காணப்படுதல் வேண்டும்.

(ஈ) மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகால்களின் ஊடாக செல்கின்ற கழிவு நீர் ஏதேனும் பொது நீரோட்டங்களில் சென்று கலப்பதைத் தவிர்ப்பதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய கழிவு நீரை உள்ளீர்க்கக்கூடிய குழியொன்றுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) கழிவுநீர் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீரை உள்ளீர்க்கும் குழி காற்றோட்டத்திற்கு திறந்துவிடப்பட்டதாக இருத்தலாகாது.

(உ) இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற உயிர்சேதன கழிவுப்பொருட்களை இடுவதற்கு போதியளவு பாத்திரங்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் இறுதியில் அத்தகைய கழிவுப்பொருட்களை நில மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்தல் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபையின் கழிவுகளை சேகரிக்கும் வாகனத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(ஊ) நிலையத்தில் சேவையாற்றுகின்ற ஆட்களின் பயன்பாட்டிற்காக போதியளவு நீர் அடைக்கப்பட்ட மலசலகூட வசதிகள் காணப்படுதல் வேண்டுமென்பதோடு மலசலகூடத்தை பயன்படுத்தியதன் பின்னர் பாவனைக்குப் பொருத்தமான துப்புரவேற்பாட்டு முறைகள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. ஈக்கள் அல்லது பூச்சிகள் அல்லது வேறு எந்தவொரு விலங்கும் உட்புக முடியாதவாறு நன்றாக மூடிவைக்கக்கூடிய வண்டியில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதேனுமொரு பாத்திரத்தில் மூடப்பட்ட

விதத்தில் ஏற்றிச் செல்வதாயிருந்தாலன்றி எந்தவொரு ஆளும் எந்தவொரு இறைச்சியையும் ஏற்றிச் செல்லலாகாது என்பதோடு அத்தகைய இறைச்சியை ஏற்றிச் சென்றதன் பின்னர் அவ்வாறு இறைச்சியை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்திய வாகனம் அல்லது பெட்டி அல்லது வேறு பாத்திரம் தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி நன்றாகக் கழுவிவிடப்படுதல் வேண்டும்.

6. உரிமம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்தினதும் நாளாந்த அலுவல்களின் இறுதியில் அவ்விடத்தின் தரையையும், சுவர்களின் பீங்கான் ஓடுகள் இடப்பட்ட அல்லது சீமெந்துச் சாந்து இடப்பட்ட பகுதிகளையும் இறைச்சியை அறுப்பதற்காக பயன்படுத்தும் குற்றியையும், கருவிகளையும், இறைச்சியை விற்பனை செய்வதற்காக வெளிக்காட்டுகின்ற இடத்தையும் தொற்றுநீக்கித் திரவம் இட்டு கழுவித் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7. உரிமம் பெற்ற எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையம் மற்றும் அதனைச் சுற்றிலுமுள்ள வடிகால்களையும், இறைச்சியை களஞ்சியப்படுத்தல், தயார் செய்தல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து பாத்திரங்களையும் கருவிகளையும் சிறந்த விதத்தில் திருத்தியமைத்து, துர்நாற்றங்களின்றி வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

8. உரிமம் பெற்ற எந்தவோர் இறைச்சி விற்பனை நிலையமும் நாய்கள், பூனைகள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு எந்தவொரு விலங்கும் அற்றதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

9. உரிமம்பெற்ற இடத்தில் சேவையாற்றுகின்ற ஆட்களின் பயன்பாட்டுக்காக குடிப்பதற்குத் தகுந்த நீர் போதியளவில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

10. இறைச்சி விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு முக அணிகலன்கள், கையுறைகள் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகலன்களை வழங்குதலும், அத்தகைய ஊழியர்கள் இறைச்சி விற்பனை நிலையத்தில் சேவையிலீடுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய பாதுகாப்பு அணிகலன்களை அணிந்திருப்பதை உறுதிசெய்தலும் உரிமம் பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும். இறைச்சி விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம் பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு ஊழியர் சார்பிலும் மருத்துவ அறிக்கை உள்ளடங்கிய பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டும்.

11. உரிமம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆளினாலும் பயன்படுத்துவதற்காக சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவத்தை வைத்திருத்தல் உரிமம் பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும்.

12. (அ) உரிமம் பெற்ற இடத்தில் உருவாகின்ற அனைத்து கழிவுப் பொருட்களும் மீளப் பயன்படுத்துவதாயிருந்தாலன்றி அத்தகைய கழிவுப் பொருட்களை –

(i) உயிர்ச்சேதன கழிவுப்பொருள்,

(ii) கண்ணாடி,

(iii) காகிதம் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்,

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்,

(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோகப் பொருட்களின் பகுதிகள்,

(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேறு மூலப்பொருட்களிலிருந்து எஞ்சுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்,

(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்,

ஆகிய வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒவ்வொரு வகை கழிவுப் பொருளையும் இடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு ஏற்பாடு செய்தல் உரிமம் பெற்றவரின் கடமையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அகற்றுவதாயிருந்தாலேயன்றி, தவிசாளரால் கட்டளையிடப்படுகின்ற விதத்தில் இறுதி அகற்றுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

13. இந்தத் துணைவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையத்தை கொண்டுநடாத்துகின்ற இடம் 4வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளைக்கும் இணங்குகின்றவாறு காணப்படுதல் முடிவடையுமெனில் அல்லது இப்பிரிவின் துணைவிதிகளின் வேறேதேனுமொரு துணைவிதியின் கட்டளைகளுக்கு முரணாக உள்ளவிடத்து, நிச்சயித்துக் குறிப்பிடப்படுகின்ற ஒரு தினத்திற்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தை அந்தக் கட்டளைக்கு இணங்குகின்றதான நிலைமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு உரிமம் பெற்றவருக்கு கட்டளையிடுகின்றதான அறிவித்தலொன்றை குறிப்பிட்ட உரிமம்பெற்றவருக்கு ஒப்படைப்பதற்கு தவிசாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

14. 13வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமம் பெற்றவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய வித்தில் விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளபோது குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். ஆயினும், அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலம் பதினான்கு நாட்களுக்கு மேற்பட்டதாயிருத்தலாகாது.

15. எந்தவொரு ஆளும் விற்பனை நிலையமல்லாத எந்தவோர் இடத்திலும் தவிசாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமின்றி இறைச்சி விற்பனையின் பொருட்டு எந்தவொரு இடத்தையும் பயன்படுத்தலாகாது. செய்யக்கூடாத கருமங்கள் .

16. மாடு அறுத்தல் கட்டளைச் சட்டத்தின் கட்டளைகளின் கீழ் முறைசார்ந்ததொரு உரிமத்தைப் பெற்றுள்ள அல்லது மாடு அறுக்கும் இடத்தில் அறுக்கப்பட்ட எந்தவொரு மிருகத்தினதும் இறைச்சியைத் தவிர எந்தவோர் ஆளும் எந்தவொரு இறைச்சியையும் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தலோ ஆகாது.

17. உரிமம்பெற்ற இடத்தில் நாளாந்த வியாபார அலுவல்கள் முடிவடைந்ததன் பின்னர் விற்பனை செய்ய முடியாது எஞ்சுகின்ற இறைச்சி அதிகுளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் மற்றும் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து மறுநாள் இறைச்சி விற்பனை நிலையத்தை திறக்கும் சந்தர்ப்பம் வரை அத்தகைய அதிகுளிர்சாதனப் பெட்டி உரியவாறு இயங்கிக் கொண்டிருந்தாலேயன்றி எஞ்சுகின்ற எந்தவொரு இறைச்சியையும் மறுநாள் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டியில் வைத்திருத்தல் அல்லது உரிமம்பெற்ற இடத்தில் வைத்திருத்தல் ஆகாது.

18. எந்தவோர் மாடு அறுப்பு நிலையத்திலும் ஏதேனுமொரு தினத்தில் இறைச்சிக்காக விலங்குகள் அறுக்கப்படுவதை தடை செய்து அல்லது மாடு அறுத்தல் கட்டளைச் சட்டத்தின் 17வது பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் உரிய மேலாண்மையினால் கட்டளையொன்று வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளபோது, எந்தவோர் இறைச்சி விற்பனை நிலையத்திலும் விற்பனையின் பொருட்டு இறைச்சியை வைத்திருத்தல் அல்லது விற்பனையின் பொருட்டு இறைச்சியை காட்சிப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தலாகாது.

19. உரிமம்பெற்ற இடத்தில் இறைச்சியை இட்டுவைப்பதற்கு அல்லது தயார் செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு பயன்படுத்துகின்ற கருவிகள் அல்லது பாத்திரங்களைத் தவிர எந்தவொரு பொருளையும் ஆடையையும் அல்லது நித்திரைகொள்கின்ற விரிப்பையும் அல்லது வேறு எந்தவொரு பொருளையும் வைத்திருத்தலாகாது.

20. (அ) ஏதாவது தொற்று, தொடுகை அல்லது தோல் நோய் பீடித்த அல்லது அண்மையில் அத்தகைய நோய் பீடித்திருந்த எவரேனுமொருவர் அல்லது அத்தகைய ஏதேனும் நோய் பீடித்த ஒருவருக்கு அண்மையில் கவனிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எவரேனுமொருவர் அத்தகைய நோய்த் தொற்று அல்லது கிருமி ஊட்டற் காலகட்டம் கடந்திருந்தாலேயன்றி எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும்

எவ்விதத்திலுமான வியாபாரத்தில் அல்லது அவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடுகின்ற எவரேனுமொரு ஆளின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படுதல் அல்லது ஏதேனுமொரு பணியில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவித் தூய்மையாக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தாலேயன்றி எவரும் இறைச்சி விற்பனை நிலையத்தில் எவ்விதத்திலுமான பணியில் ஈடுபடுதலோ ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுதலோ ஆகாது.

(இ) இறைச்சி விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவையேனும் மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்குதல் உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

21. செயலாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைத்துள்ள அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தியுள்ள அல்லது களஞ்சியப்படுத்தி வைத்துள்ள ஏதேனும் இறைச்சி வகையிலிருந்து மாதிரியொன்றை, அதன் விலையைச் செலுத்தி பெறுதல் சட்டரீதியானதாதல் வேண்டுமென்பதோடு, உரிமம் பெற்ற எவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுவதை நிராகரித்தலோ அல்லது அதற்கு தடையேற்படுத்தலோ ஆகாது.

22. இந்தத் துணைவிதியுடன் தொடர்புடைய அலுவல்களின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அதன் தவிசாளர் ஆளுகைப் பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு எழுத்து மூலம் ஒப்படைத்தல் சட்டரீதியானதாதல் வேண்டும். அதிகாரத்தை ஒப்படைத்தல்.

23. 13 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு உரிமம்பெற்றவரும் குறிப்பிட்ட அறிவித்தலில் நிச்சயித்துக் கட்டளையிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் கட்டளையிடப்பட்டவாறு செயலாற்றத் தவறுமிடத்து, அந்த இடத்திற்காக வழங்கப்பட்டுள்ள உரிமம் தவிசாளரால் இரத்துச் செய்யப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும். உரிமத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம்.

24. இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமமும், முன்னரே இரத்துச் செய்யப்படாலன்றி, அந்த உரிமம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

25. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல் .

26. இந்தத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு ஏற்பாடும் மீறப்படுதலானது, மீறப்படுதல் பற்றிய தவறொன்று தொடர்பில் தகுந்த நீதித்துறை அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 வது பிரிவின் (2) வது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உட்பட்டதாதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே குறிப்பிடப்பட்ட 122 ஆம் பிரிவின் (2) வது உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

27. இந்தத் துணைவிதியின் கட்டளைகளை பரிசீலிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் இறைச்சி விற்பனை நிலையத்தில் இறைச்சி விற்பனை மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும். பொருள்கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

ஏதேனுமொரு பிரதேச சபையினால் இந்தத் துணைவிதிகள் உரியவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி, இப்பிரிவின் துணைவிதிகளில்,

'தவிசாளர்' என்பதன் மூலம் ................. பிரதேச சபையின் தவிசாளர் கருதப்படுவார்.

'பிரதேச சபை' என்பதன் மூலம் ......................... பிரதேச சபை எனக் கருதப்படும்.

'செயலாளர்' என்பதன் மூலம் ஏதேனும் ................ பிரதேச சபையின் செயலாளர் எனக் கருதப்படுவார்.

'இறைச்சி விற்பனை நிலையம்' என்பதன் மூலம் விற்பனைக்காக இறைச்சியை வெளிக்காட்டுகின்ற இடம் எனக் கருதப்படும்.

'உரிமம் பெற்றவர்' என்பதன் மூலம், இந்தத் துணைவிதிகளின் கட்டளைகளின் கீழ் உரிமம் பெற்றுள்ள எவரேனும் ஒருவர் எனக் கருதப்படுவார் என்பதோடு, குறித்த உரிமம்பெற்ற இடத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் என்பதன் மூலம், தற்போது குறித்த இடத்தின் பணிகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனுமொருவரும்,

'உரிமம்பெற்ற இடம்' என்பதன் மூலம் இதன் எந்தவொரு துணைவிதியினதும் கட்டளைகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளது எந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கோ அத்தகைய இடமும்,

'அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்' என்பதன் மூலம் இதே பணியின் பொருட்டு தவிசாளரால் ஆவணமொன்றின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ...................... பிரதேச சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரும் எனக் கருதப்படும்.

'பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்' என்பதன் மூலம் குறித்த இடத்தில் தொழில்முயற்சிப் பணிகள் நடைபெறுகின்ற எந்தவொரு நேரமும் எனக் கருதப்படும்.

*4-642*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.